# உதயன்

சுடர் : 36 | கதிர் : 194 | செவ்வாய்க்கிழமை | வைகாசி 25 ஆம் நாள் 08 ஜூன் 2021 | வள்ளுவர் ஆண்டு 2052 | பக்கங்கள்: 16 விலை: 30 | செய்தி : 021 493 0000 விளம்பரம்: 021 493 1111


## வடக்கில் தொற்று 94

யாழ்ப்பாணம், ஜூன் 8
யாழ்ப்பாண மாவட்டத்தில் 88 பேர் உட்பட வடக்கில் 94 பேருக்குத் தொற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. யாழ்ப்பாணப் பல்கலைக் 15

## கொரோனா பற்றி போலித் தகவல்: கண்காணிக்க விசேட குழு

கொழும்பு, ஜூன் 8
இணையம் மற்றும் சமூக வலைத்தளங்களில் கொரோனா தொடர்பான போலியான தகவல்களை பதிவிடுபவர் 15

## நிதி நிறுவனத்தினரின் தொல்லையால் உயிர்மாய்த்தார் கடலுணவு வியாபாரி!

### வடமராட்சி கிழக்கில் பரிதாபம்

யாழ்ப்பாணம், ஜூன் 8
பயணத்தடை காரணமாக வாழ்வாதாரத்தை இழந்த கடலுணவு வியாபாரி ஒருவர், வாகன குத்தகைக் கட்டணத்தை செலுத்த முடியாமல் நிதி நிறுவன உத்தியோகத்தர்களின் நெருக்கடி காரணமாக தனது உயிரை மாய்த்துள்ளார் என்று விசாரணையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. 15

## ஊரடங்கை அறிவிக்கும் நோக்கம் எமக்கில்லை

*ஜனாதிபதியுடன் இன்று முக்கிய கலந்துரையாடல் என்கிறார் சவேந்திர*

கொழும்பு, ஜூன் 8
நாட்டில் கொரோனாப் பரவலை அடுத்து பிறப்பிக்கப்பட்டுள்ள முழு நேரப் பயணக் கட்டுப்பாட்டை மேலும் ஒருவார காலம் நீடிக்கும் சுகாதார நிபுணர் 15

### யாழ்ப்பாணத்துக்கு

# அடுத்த கட்டத் தடுப்பூசி இப்போதைக்கு இல்லை

*கொழும்பு சுகாதார அமைச்சு நேற்று மதியம் அறிவிப்பு*

**கொழும்பு, ஜூன் 8**

**யாழ்ப்பாண மாவட்டத்தில் இரண்டாம் கட்டத்துக்குரிய தடுப்பூசிகள் இந்த வாரம் அல்லது தற்போதைக்கு வழங்கப்படமாட்டாது என்று கொழும்பு சுகாதார அமைச்சு வடக்கு மாகாண சுகாதாரத் திணைக்களத்துக்கு நேற்று மதியம் திடீரென அறிவித்துள்ளது.** 15

## நடமாட்டம் அதிகரித்தால் தொற்றைக் கட்டுப்படுத்த மேலும் காலதாமதமாகும்

**சுகாதார பிரதிப் பணிப்பாளர் நாயகம் எச்சரிக்கை**

கொழும்பு, ஜூன் 8
நாட்டில் கொவிட் தொற்று பரவலைத் துரிதமாகக் கட்டுப்படுத்தக்கூடிய சூழல் தற்போது காணப்படுகிறது. எனினும், போக்குவரத்துக் கட்டுப்பாடுகள் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ள நிலையிலும் 15

## ஒரு மாதத்துக்கு உட்பட்ட 3 குழந்தைகளுக்கு கொரோனாத் தொற்று

யாழ்ப்பாணம், ஜூன் 8
பிறந்து ஒரு மாதத்துக்கு உட்பட்ட மூன்று குழந்தைகளுக்கு யாழ்ப்பாண மாவட்டத்தில் 14

## இலங்கையில் கொல்லப்பட்டோர் மூன்றாம் தர ஊடகவியலாளர்களாம்

**கடும் எதிர்ப்பால் மன்னிப்புக்கோரினார் சுகாதார சேவைகள் பணிப்பாளர்**

கொழும்பு, ஜூன் 8
"இலங்கையில் கடந்த காலங்களில் கொல்லப்பட்ட பத்திரிகையாளர்கள் மூன்றாம் தரத்தினரே. அவர்கள் போன்று நீங்களும் செயற்படவேண் 14



## தேர்தல் சட்ட மறுசீரமைப்பு முன்மொழிவுகளை 19க்கு முன் அனுப்பவும்

கொழும்பு, ஜூன் 8
தேர்தல் சட்ட மறுசீரமைப்புத் தொடர்பில் பொதுமக்களின் முன்மொழிவுகளை சமர்ப்பிப்பதற்கான கால அவகாசம் எதிர்வரும் 19ஆம் திகதியுடன் முடிவடையவுள்ளது என்று நாடாளுமன்றின் 15

## மேலும் 47 பேர் சாவு; மொத்தக் காவு 1,789

கொழும்பு, ஜூன் 8
நாட்டில் கொரோனா வைரஸ் தொற்றால் பாதிக்கப்பட்ட மேலும் 47 பேர் உயிரிழந்துள்ளனர். இதனை 14

## கர்ப்பிணிகள் விரும்பினால்தான் தடுப்பூசி ஏற்றிக்கொள்ளலாம்

*அமைச்சு அறிவுறுத்தல்*

கொழும்பு, ஜூன் 8
கர்ப்பிணிகளுக்கு நாளையிலிருந்து கொரோனாத் தடுப்பூசி ஏற்றப்படவுள்ளது. தெரிவுசெய்யப்படும் கர்ப்பிணிகளில், தடுப்பூசி ஏற்றுவதற்கு விருப்பம் தெரிவிப்பவர்களே தடுப்பூசியை ஏற்றிக்கொள்ள வேண்டும் என்று சுகாதார அமைச்சு அறிவித்துள்ளது. 14

## 'சைனோ.'. பார்ம்' டோஸ் போட்டவர்கள் இரண்டாவதாகவும் அதையே ஏற்றுக

*இல்லையேல் பயனில்லை என்கின்றது அரசு*

கொழும்பு, ஜூன் 8
சைனோஃபோர்ம் மற்றும் சைனோவெக் தடுப்பூசிகளைப் பொறுத்தவரையில் முதலாம் தடுப்பூசியாக சைனோஃபோர்ம் ஏற்றிக்கொண்டவர்கள் இரண்டாவது தடுப்பூசியாகவும் அதையே ஏற்ற வேண்டும். இல்லையேல் எந்தப் பலனும் கிடைக்காது."

இவ்வாறு ஒளடத உற்பத்திகள், விநியோக ஒழுங்குறுத் 14

## 96 கிலோ கேரளக் கஞ்சா நாகர்கோவிலில் மீட்பு

வடமராட்சி, ஜூன் 8
96 கிலோகிராம் கேரளக் கஞ்சா போதைப் பொருள், வடமராட்சி கிழக்கு நாகர்கோவில் கடற்கரையில் நேற்றுக் காலை மீட்கப்பட்டுள்ளது. 14


செய்திகள் மற்றும் விளம்பரங்களை உதயனில் பிரசுரிக்க....

செய்தி
021 493 0000
077 1209994

விளம்பரம்
021 493 1111
071 6182182


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# ஒட்சிசன் தேவைப்படுவோர் வீதம் இலங்கையில் சடுதியாக அதிகரிப்பு

## ஆபத்தான கட்டத்துக்கு நகர்கிறது என்று எச்சரிக்கிறது அரச மருத்துவ அதிகாரிகள் சங்கம்

கொழும்பு, ஜூன் 8

கொரோனாத் தொற்றாளர்களில் ஒட்சிசன் தேவைப்படுவோர் வீதத்தில் இலங்கை தென்கிழக்கு ஆசியாவில் மூன்றாம் இடத்தில் உள்ளது. இலங்கை ஆபத்தான கட்டத்துக்கு நகர்வதையே இது எடுத்துக்காட்டுகின்றது. இவ்வாறு இலங்கை அரச மருத்துவ அதிகாரிகள் சங்கம் எச்சரிக்கை விடுத்துள்ளது.

அந்தச் சங்கம் நேற்று நடத்திய ஊடகவியலாளர் சந்திப்பில், மத்திய குழு உறுப்பினர் மருத்துவர் வாசன் ரட்ணசிங்கம் தெரிவிக்கையில்,

கொரோனாத் தொற்றாளர்களின் எண்ணிக்கை மற்றும் உயிரிழப்புக்களின் எண்ணிக்கை நாளாந்தம் அசாதாரணமாக அதிகரித்து வருகின்றன. கடந்த 5ஆம் திகதி 48 உயிரிழப்புக்கள் பதிவாகியுள்ளன. இது அதிகளவான எண்ணிக்கையாகும்.

பயணக் கட்டுப்பாட்டை நடைமுறைப்படுத்துவதன் ஊடாக தொற்றாளர் எண்ணிக்கையைக் குறைத்து, உயிரிழப்புக்களைக் குறைத்து விடலாம் என்று எதிர்பார்த்தபோதும் அது நடைபெறவில்லை. கொரோனாத் தொற்றை முகாமைத்துவம் செய்வதற்கு மக்களின் ஒத்துழைப்பு போதுமானதாக இல்லை. பொதுமக்கள் ஒத்துழைப்பு வழங்கினாலேயே தொற்றை எதிர்பார்த்த அளவுக்குள் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வரமுடியும்.

பல்வேறு சிக்கலான நோய் நிலைமை உள்ள கொரோனாத் தொற்றாளர்களின் எண்ணிக்கையும் அதிகரித்து வருகின்றது.

ஒட்சிசன் தேவைப்படுகின்ற நோயாளர்கள் மற்றும் அதிதீவிர சிகிச்சைப் பிரிவில் அனுமதிக்கப்படுகின்ற நோயாளர்கள் எண்ணிக்கைகள் அதிகரித்துச் செல்கின்றன.

தென்கிழக்கு ஆசியாவில் ஒட்சிசன் தேவைப்படும் நிலைமையை பார்த்தால், கடந்த காலங்களுடன் ஒப்பிடுகையில் 441 சதவீதத்தால் இலங்கையில் அதிகரித்துள்ளது. தென்கிழக்கு ஆசியாவில் நேபாளம் முதலிடத்திலும், இரண்டாவது இடத்தில் வியட்நாமும் உள்ளன. மூன்றாவது இடத்தில் இலங்கை பட்டியலிடப்பட்டுள்ளது.

எதிர்காலத்தில் உயிரிழப்புக்கள் அதிகமாகும் சாத்தியங்கள் காணப்படுகின்றன. பொதுமக்கள் ஒத்துழைத்தால் மாத்திரமே கொரோனாத் தொற்றைக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வரமுடியும்- என்றார். (ஒ.5)

# ரூ. 5 ஆயிரம் கொடுப்பனவில் யாழில் சமுர்த்தி கடன் அறவீடு

யாழ்ப்பாணம், ஜூன் 8

**பயணத் தடையால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு அரசு வழங்கும் 5 ஆயிரம் ரூபா கொடுப்பனவில் சமுர்த்திக் கடனுக்குரிய கொடுப்பனவுகளை கழித்து எஞ்சிய பணத்தை வழங்கும் நிலைமை யாழ்ப்பாண மாவட்டத்தில் காணப்படுகின்றது. இவ்வாறான கழிப்புக்கள் எதனையும் மேற்கொள்ளக்கூடாது என்று அறிவுறுத்தப்பட்டபோதும் அதனை மீறி இந்தச் செயற்பாடு முன்னெடுக்கப்பட்டுள்ளது.**


சமுர்த்தி பயனாளிகளுக்கு அவர்களுடைய மாதாந்த முத்திரைப் பெறுமதியையும் உள்ளடக்கி 5 ஆயிரம் ரூபாவே வழங்கப்பட்டு வருகின்றது. அவ்வாறு வழங்கப்படும் 5 ஆயிரம் ரூபாவிலும் சில சமுர்த்தி வங்கிகள், பயனாளிகள் பெற்றுக்கொண்ட கடன்களைக் கழித்தே எஞ்சிய கொடுப்பனவை வழங்குகின்றன.

வேலணை பிரதேச செயலர் பிரிவுக்கு உட்பட்ட புங்குடுதீவு சமுர்த்தி வங்கி இவ்வாறான செயற்பாட்டிலேயே ஈடுபட்டுள்ளது. 'மக்கள் பயணத் தடையால் வாழ்வாதாரத்துக்கு அல்லாடிக் கொண்டிருக்கும் நிலையில் அரசு 5 ஆயிரம் ரூபா வழங்குவதாக பரப்புரை செய்கின்றது. ஆனால் சமுர்த்திக் கொடுப்பனவுக்கு மேலதிகமாக அந்த நிதி வழங்கப்படவில்லை. சமுர்த்தி முத்திரைப் பெறுமதியையும் சேர்த்து மொத்தமாக 5 ஆயிரம் ரூபாவே மக்களுக்கு வழங்குகின்றனர்.

அவ்வாறு வழங்கும் பணத்திலும், கடன் தொகையைக் கழிக்கின்றோம் என்ற பெயரில் பெரும் தொகையை வெட்டி சிறு தொகையே மக்களுக்கு வழங்கப்படுகின்றது. இது பனையால் விழுந்தவனை மாடேறி மிதித்ததை போன்று ஏற்கனவே வாழ்வாதாரப் பாதிப்புக்குள்ளாகிய குடும்பங்களை மேலும் பாதிக்கின்றது' என்று வேலணை பிரதேச சபையின் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் உறுப்பினர் க.நாவலன் சுட்டிக்காட்டினார். இந்த விடயம் தொடர்பில் யாழ்ப்பாண மாவட்ட சமுர்த்தி திணைக்கள உயர் அதிகாரிகளைத் தொடர்புகொண்டு கேட்டபோது, இந்த கொடுப்பனவில் எந்தக் கழிப்புக்களையும் மேற்கொள்ளக்கூடாது என்று அறிவுறுத்தியுள்ளோம். சமுர்த்தி கட்டாய சேமிப்பைக் கூட அறவிட வேண்டாம் என்றுதான் பணித்திருந்தோம். மேற்படி விடயம் தொடர்பில் ஆராய்ந்து, பயனாளிகளுக்கு பணத்தை மீள வழங்குவதற்கு நடவடிக்கை எடுப்போம்- என்றனர். (ஒ.5)

# 12 ஆயிரம் கொவிஷீல்ட் தடுப்பூசிகள் எப்படி வந்தன?

## வெளிச்சத்துக்கு வரும் உண்மைகள்




கொழும்பு, ஜூன் 8

இலங்கைக்கு கொண்டுவரப்பட்ட அஸ்ட்ராஜெனகா கொவிஷீல்ட் தடுப்பூசிகளின் எண்ணிக்கைக்கும், மக்களுக்கு ஏற்றப்பட்ட தடுப்பூசிகளின் எண்ணிக்கைக்கும் இடையில் வேறுபாடுகள் காணப்படுகின்றன. இந்த வேறுபாடுகளை சுகாதார அமைச்சும் ஒப்புக்கொண்டுள்ளது.

சுகாதார அமைச்சின் தொற்றுநோய்ப் பிரிவு கடந்த 3ஆம் திகதி கொவிஷீல்ட் தடுப்பூசி ஏற்றியவர்களின் விவரங்களை வெளியிட்டது. அதில் 9 லட்சத்து 25 ஆயிரத்து 242 பேர் முதலாவது டோஸையும், 3 லட்சத்து 50 ஆயிரத்து 958 பேர் இரண்டாவது டோஸையும் ஏற்றியுள்ளனர்.

ஆனால் இலங்கைக்கு 12 லட்சத்து 64 ஆயிரம் தடுப்பூசிகளே கிடைக்கப்பெற்றன என அரசு அறிவித்திருந்தது. எனவே மேலதிகமாக 12 ஆயிரத்து 200 தடுப்பூசிகளும் எப்படி வந்தன என்ற கேள்விகள் பொதுமக்கள் மத்தியில் எழுந்துள்ளன. இதற்கு சுகாதார சேவைகள் பிரதிப் பணிப்பாளர் மருத்துவர் ஹேமந்த ஹேரத் விளக்கமளித்துள்ளார்.

கொவிஷீல்ட் தடுப்பூசியின் ஒரு லட்சத்து 26 ஆயிரத்து 400 குப்பிகளிலிருந்து (வையல்) 12 லட்சம் டோஸ்களை ஏற்ற முடியும். அதாவது 0.5 மில்லி லீற்றர் அளவுடைய 10 டோஸ்களை ஒரு குப்பி கொண்டிருக்கும்.

ஏதாவது ஒரு டோஸ் வீணாகிவிட்டால் அதற்காக மேலதிகமாக ஒரு டோஸை ஒரு குப்பி கொண்டிருக்கும். அனைத்துக் குப்பிகளிலும் உள்ளதை இவ்வாறு பயன்படுத்த முடியாது.

மேலதிகமான டோஸை ஏற்றவேண்டும் என்று சுகாதார அமைச்சு அறிவுறுத்தவில்லை. ஆனால் சாத்தியமிருந்தால் அதனை ஏற்றுமாறு கூறியிருந்தோம். அப்படித்தான் வழங்கப்பட்டதை விட கூடுதலான அளவு டோஸ்கள் ஏற்றப்பட்டுள்ளன என்று அவர் குறிப்பிட்டார்.

இதேவேளை, தடுப்பூசி ஏற்றும் நடவடிக்கை ஆரம்பிக்கப்பட்டபோது இவ்வாறு மேலதிக டோஸ் ஏற்றப்படாமல் வீணடிக்கப்பட்டது எனவும், அண்ணளவாக சுமார் 9 ஆயிரம் டோஸ்கள் இவ்வாறு வீணடிக்கப்பட்டன எனவும் கொழும்பு ஆங்கில ஊடகம் சுட்டிக்காட்டியுள்ளது. (ஒ.5.இ)

# இன்று மட்டுமே சபை அமர்வு

கொழும்பு, ஜூன் 8

இந்த வாரம் மூன்று நாள்கள் நடத்தத் திட்டமிடப்பட்டிருந்த நாடாளுமன்ற அமர்வு இன்று ஒரு நாள் மாத்திரமே நடைபெறும் என்று தெரிவிக்கப்படுகின்றது. நாடாளுமன்றக் கூட்டத் தொடர் தொடர்பான கட்சித் தலைவர்களின் கூட்டம், சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தன தலைமையில் நேற்று இடம்பெற்றது. இதன்போது இன்று காலை 10 மணியிலிருந்து பி.ப. 4.30 மணி வரையில் நாடாளுமன்ற அமர்வை நடத்தத் தீர்மானிக்கப்பட்டுள்ளது. இதன்போது, எதிர்க்கட்சியினரால் தற்போதைய கொரோனா நிலைமை தொடர்பான சபை ஒத்திவைப்பு பிரேரணை முன்வைக்கப்படவுள்ளது. அதேவேளை, பேர்ள் கப்பல் விவகாரம் தொடர்பாகவும் விவாதிக்கப்படலாம் என்று தெரிவிக்கப்படுகின்றது.

முன்னதாக இந்த வாரம் மூன்று நாள்கள் நாடாளுமன்றக் கூட்டத்தொடர் நடத்தத் திட்டமிடப்பட்டிருந்தது. தற்போதைய கொரோனா நிலைமை மற்றும் பயணத்தடை காரணமாக அது ஒரு நாளாகச் சுருக்கப்பட்டுள்ளது. (ஒ.5)

# சுகாதார சேவைகளிலும் கர்ப்பிணிகளுக்கு விடுப்புக்கு அனுமதி

கொழும்பு, ஜூன் 8

கொரோனாத் தொற்றுக் காரணமாக சுகாதார சேவைகளில் பணிபுரியும் கர்ப்பிணிகளும் பணிக்குச் செல்லவேண்டியதில்லை என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. பொதுநிர்வாக அமைச்சு வெளியிட்ட 02/2021(11) மற்றும் 2021.05.10 ஆகிய சுற்றறிக்கைகளை சுகாதார சேவையிலுள்ள கர்ப்பிணிகளும் பின்பற்ற முடியும் என்று சுகாதார அமைச்சு அறிவித்துள்ளது.

சுகாதார சேவைகளிலுள்ள கர்ப்பிணிகள் சுய விருப்பில் கொரோனாத் தொற்று அபாயமில்லாத இடங்களில் பணியாற்ற முடியும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. இந்தப் புதிய சுற்றறிக்கை சுகாதார அமைச்சின் செயலரின் கையெழுத்துடன் வெளியிடப்பட்டுள்ளது. (ஒ.5.இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கோவில் காணியை அபரிக்க முயற்சி

*நிர்வாகத்தினர் குற்றச்சாட்டு*

வலி.தென்மேற்கு, ஜூன் 8

கோவிலுக்கு சொந்தமான வெற்றுக்காணியை சிலர் அத்துமீறி அடாத்தாகப் பிடித்து வேலி அமைந்துள் ளனர் என்று கோவில் நிர்வாகத்தினர் குற்றம் சாட்டு கின்றனர்.

யாழ்ப்பாணம் உடுவில் பிரதேச செயலர் பிரிவின் ஜே/183 கிராம அலுவலர் பிரிவில் அமைந்துள்ள உடுவில் புளியடி ஞான வைரவர் கோவிலுக்கு தெற்காக அமைந்துள்ள கோவில் காணியையே கையகப்படுத்துகின்றனர் என்று குற்றம் சாட்டப்படுகின்றது. இதற்கு முன்னரும் குறித்த காணியை அபகரிக்கும் நோக்கில் பலர் உரிமைகோரினர். எனினும், யாரிடமும் குறித்த காணிக்குரிய எந்தவிதமான ஆவணங்களும் இல்லாதமையால் அத்தகைய முயற்சிகள் கிராம மக்களாலும் கோவில் நிர்வாகத்தினராலும் தடுக்கப்பட்டு வந்தன. இந்த நிலையிலேயே 1987 ஆம் ஆண்டின் 15ஆம் இலக்க பிரதேச சபை சட்டத்துக்கும் முரணாக சிலர் அடாத்தாக வேலி அமைத்துள்ளனர் என்று தெரிவிக்கப்படுகின்றது.

இந்த நிலையில் கோவில் நிர்வாகத்தினர் மற்றும் ஊர் மக்கள் அடாத்தாக அமைக்கப்பட்டுள்ள வேலியை அகற்றி குறித்த காணியை விடுவிக்குமாறு குறித்த நபர்களை கோரியுள்ளபோதும், இதுவரை அந்தக் காணி விடுவிக்கப்படவில்லை.

கோவில் நிர்வாகத்தினர் பயணத்தடையால் வெளியே சென்று முறைப்பாடு எதுவும் செய்ய முடியாத நிலையில் இருப்பதால், பிரதேச சபையினர் மற்றும் பிரதேச செயலகத்தினர் குறித்த விடயத்தில் தலையிட்டு குறித்த ஆக்கிரமிப்பை அகற்ற உடன் நடவடிக்கை எடுக்க வேண்டும் என கிராம மக்கள் கோரியுள்ளனர். (து-115)

# 1,000 தொற்றாளர்களை எட்டியது வவுனியா

*17 பேர் உயிரிழப்பு*

வவுனியா மாவட்டத்தில் கொரோனா வைரஸ் தொற்றுக்கு உள்ளானவர்களின் எண்ணிக்கை ஆயிரத்தைக் கடந்துள்ளதுடன் 17 பேர் உயிரிழந்துள்ளனர் என்று சுகாதாரப் பிரிவினர் தெரிவித்துள்ளனர்.

கடந்த வருடம் பெப்ரவரி மாதம் ஆரம்பித்த கொரோனா வைரஸ் தொற்று வவுனியாவில், பல்வேறு பகுதிகளில் கணிசமான தாக்கத்தைச் செலுத்தியிருந்தது. கடந்த வருடம் பெப்ரவரி மாதம் முதல் நேற்றுமுன்தினம் வரையான காலப்பகுதியில் வவுனியா மாவட்டத்தில் ஆயிரத்து 40 கொரோனாத் தொற்றாளர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

அவர்களில் அநேகமானவர்கள் வவுனியா சுகாதார மருத்துவ அதிகாரி பிரிவைச் சேர்ந்தவர்கள் எனத் தெரிவிக்கப்படுகின்றது. இதேவேளை வவுனியாவில் கொரோனாத் தொற்று காரணமாக இதுவரை 17 பேர் உயிரிழந்துள்ளனர். (ப-110)

# ஆளணிப் பற்றாக்குறையுடன் கனகராயன்குளம் மருத்துவமனை

## நிவர்த்திசெய்யுமாறு வவு. வடக்கு பிரதேச சபை தவிசாளர் கோரிக்கை

வவுனியா, ஜூன் 8

**வவுனியா கனகராயன்குளம் மருத்துவமனையில் காணப்படும் ஆளணிப் பற்றாக்குறையை நிவர்த்திசெய்வதற்கு உரிய தரப்பினர் முன்வர வேண்டும் என்று வவுனியா வடக்கு பிரதேச சபையின் தவிசாளர் எஸ். தணிகாசலம் தெரிவித்தார்.**

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்:

கனகராயன்குளத்தில் வாழும் மக்களின் நலன்கருதி கிராமிய மருத்துவமனை ஒன்றை அமைக்குமாறு பல்வேறு தரப்பினரும் விடுத்த கோரிக்கையின் பிரகாரம் அங்கு மருத்துவமனை ஒன்று அமைக்கப்பட்டது. எனினும் அதனைத் திறப்பதில் காலதாமதமாகி அண்மையிலேயே மருத்துவமனை திறக்கப்பட்டது. மருத்துவமனைக்கு மருத்துவர், மற்றும் உதவியாளர் ஆகியோர் நியமிக்கப்பட்டனர். தற்போது குறித்த மருத்துவமனைக்கு அதிகளவான நோயாளர்கள் வருவதால் அங்கு ஆளணிப் பற்றாக்குறை ஏற்பட்டுள்ளது. ஆளணி நிரப்பப்படும் பட்சத்தில் நோயாளர்கள் சிரமமின்றி தமது நோய்க்கான சிகிச்சைகளைப் பெறுவதுடன் நேர விரயமும் ஏற்படாது. இது தொடர்பாக சம்பந்தப்பட்ட தரப்பிடம் முறையிட்டும் இதுவரை எவ்வித தீர்வும் கிடைக்க வில்லை - என்றார். (ப-110)

# யாழ். நகரில் விபத்து இருவருக்குக் காயம்

யாழ்ப்பாணம், ஜூன் 8

யாழ்ப்பாணம் நகரின் கஸ்தூரியார் வீதியில் நேற்றுக் காலை இடம்பெற்ற விபத்தில் இருவர் காயமடைந்தனர்.

யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் சிகிச்சை பெற்று ஒருவரை வீட்டுக்கு ஏற்றிசென்ற முச்சக்கர வண்டியும், அத்தியாவசிய தேவை நிமித்தம் யாழ்ப்பாண நகருக்குள் நுழைந்த மோட்டார் சைக்கிளுமே இவ்வாறு விபத்துக்குள்ளாகின என்று பொலிஸார் தெரிவித்தனர்.

மோட்டார் சைக்கிளில் பயணித்தவரும், முச்சக்கர வண்டியின் சாரதியும் சிறுகாயங்களுக்கு உள்ளாகினர் என்று தெரிவிக்கப்பட்டது. விபத்து தொடர்பில் யாழ்ப்பாணம் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ஜ-20)







# பொலிஸாரால் நேற்று சோதனைகள் இறுக்கம்

யாழ்ப்பாணம்,ஜூன் 8

பயணக் கட்டுப்பாடுகளை மீறி வீதிகளில் மக்களின் நடமாட்டம் அதிகரித்ததை அடுத்து யாழ்ப்பாணம் மாவட்டத்தின் பல்வேறு பகுதிகளிலும் நேற்று பொலிஸாரால் வீதிச் சோதனைகள் இறுக்கமாக நடைமுறைப்படுத்தப்பட்டன.

அத்தியாவசிய தேவைகளுக்காக வழங்கப்பட்டுள்ள பயண அனுமதிகளையும் மீறி பெரும் தெருக்கள் மற்றும் கிராமப் புறங்களில் மக்களின் நடமாட்டம் சில நாள்களாக அதிகரித்துள்ளது. இதனைக் கட்டுப்படுத்தும் நோக்கில் ஏ-9 வீதியில் கொடிகாமம் பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி எதிர்வீரசிங்க தலைமையிலான பொலிஸார் வீதிச் சோதனை நடவடிக்கையை முன்னெடுத்துள்ளனர். இதன்போது தேவையற்ற விதத்தில் வீதிகளில் பயணித்த வாகன சாரதிகள் மற்றும் பொதுமக்கள் அறிவுறுத்தப்பட்டு வீடுகளுக்கு திருப்பி அனுப்பப்பட்டனர்.

போக்குவரத்துத் தடைகளை மீறி வீதிகளில் பயணிக்கும் மக்களைத் தனிமைப்படுத்தத் தேவையான நடவடிக்கைகளை உடன்எடுக்குமாறு நாட்டின் அனைத்துப் பொலிஸ் நிலையங்களுக்கும் பொலிஸ்மா அதிபர் நேற்றுமுன்தினம் உத்தரவிட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (ஜ-20)

# கொரோனா பெருந்தொற்று மன்னாரில் குறைகின்றது


மன்னார், ஜூன் 8

கொவிட் 19 தொற்றுநோயின் தாக்கம் மன்னாரில் படிப்படியாகக் குறைத்து வருகின்றது என்று சுகாதாரத் தரப்பினரின் புள்ளி விபரத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.

மன்னார் மாவட்டத்தில் ஜூன் மாதம், ஆயிரத்து 578 பேருக்கு மேற்கொள்ளப்பட்ட பி.சி.ஆர் பரிசோதனையில் 15 நபர்கள் மட்டுமே கொவிட் தொற்றுக்கு உள்ளாகியுள்ளனர். நடப்பு ஆண்டில் தொற்றுக்குள்ளான 505 பேருடன், மாவட்டத்தில் இதுவரை 522 நபர்கள் தொற்றுக்கு உள்ளாகியுள்ளனர். மன்னார் மாவட்டத்தில் மொத்தமாக 18 ஆயிரத்து 597 பி.சி.ஆர் பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. அவற்றில் பாதுகாப்பு படையினரிடமும், பொதுமக்களிடமும் மேற்கொள்ளப்பட்ட 767 பி.சி.ஆர். பரிசோதனை முடிவுகள் கிடைக்கப்பெறவில்லை என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

நடப்பாண்டில், மேற்கொள்ளப்பட்ட பி.சி.ஆர். பரிசோதனைகளில், 3.99 வீதமானவர்களே கொவிட் 19 தொற்று நோயாளர்களாக மன்னார் மாவட்டத்தில் கண்டுபிடிக்கப்பட்டுள்ளனர். நான்கு பேர் தொற்று நோய்க்கு உள்ளாகி உயிரிழந்துள்ளனர். கொவிட் தொற்று நோயிலிருந்து, மன்னார் மாவட்ட மக்களைக் காப்பாற்றுவதில், சுகாதார சேவைகள் திணைக்களம், மாவட்ட, பிரதேச செயலகங்கள் பாதுகாப்புத் தரப்பினர் அரசு மற்றும் அரச சார்பற்ற நிறுவனங்கள் ஆகியவை ஒன்றிணைந்து மேற்கொண்டுவரும் நடைமுறைகளாலேயே தொற்றாளர்களின் விகிதாசாரம் மிகக் குறைவாக காணப்படுகின்றது என்று தெரிவிக்கப்படுகின்றது. கொவிட் தொற்றை மாவட்டத்தில் இருந்து விரட்டுவதற்கு தொடர்ந்தும் இறுக்கமான முறை கடைப்பிடிக்கப்படும் என்று சுகாதாரப் பிரிவு அறிவித்துள்ளது. (ப-60)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பனைசார் உற்பத்தியாளர்களும் பயணத்தடையால் கடும் பாதிப்பு

**கிளிநொச்சி, ஜூன் 8**

**கண்டாவளை பிரதேசத்துக்குட்பட்ட, பனைசார் உற்பத்திப் பொருள்களை வாழ்வாதாரத் தொழிலாகச் செய்துவரும் மக்களும், பயணத்தடை காரணமாகப் பாதிக்கப்பட்டுள்ளனர் என்று சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.**

இது தொடர்பில் பாதிக்கப்பட்ட மக்கள் தெரிவிக்கையில்:

கண்டாவளை பிரதேச செயலாளர் பிரிவுக்கு உட்பட்ட பெரியகுளம் கட்டைக் காட்டுப் பகுதியில், பனை சார் உற்பத்திப் பொருள்களான, பாய், கடகம், சுளகு, மற்றும் நீத்துப்பெட்டி என்பன வற்றை உற்பத்திசெய்யும் நாம் அவற்றை விற்பனைசெய்வதன் மூலமே எமது வாழ்வாதாரத்தை ஈடு செய்து வருகின்றோம். எனினும் தற்போதைய பயணத்தடை காரணமாக எமது பனைசார் உற்பத்திப் பொருள்களை வெளியில் கொண்டுசென்று விற்பனை செய்ய முடியாத நிலை ஏற்பட்டுள்ளது. இதனால் எமது வாழ்வாதாரம் வெகுவாகப் பாதிக்கப்பட்டுள்ளது. அத்துடன் இதற்கான மூலப்பொருளை மிருசுவில், மருதங்கேணி மற்றும் செம்பியன்பற்று ஆகிய இடங்களுக்குச் சென்று பெற்றுவந்த நிலையில் தற்போது பயணத்தடை காரணமாக அங்கு செல்ல முடியாத நிலையும் ஏற்பட்டுள்ளது. எனவே இது தொடர்பாக சம்பந்தப்பட்ட அதிகாரிகள் உரிய நடவடிக்கை எடுத்து, நாம் எமது வாழ்வாதாரத்தை மேற்கொள்ள வழியை ஏற்படுத்த வேண்டும்.

நாம் கடந்த 30 வருடங்களாக இத் தொழிலையே நம்பி வாழ்ந்து வருகிறோம். எமக்கு வேறு தொழில் எதுவும் தெரியாது. எனவே எமது தொழிலை அபிவிருத்திசெய்வதற்கும் சம்பந்தப்பட்டவர்கள் நடவடிக்கை எடுக்கவேண்டும் என்றனர். (ப-316)



# பயணத்தடை காலத்திலும் மணல் அகழ்வு தாராளம்!

## அக்கராயன் ஆற்றுப்படுக்கையில் இந்த நிலை

கிளிநொச்சி, ஜூன் 8

பயணத்தடை காலத்தில், அக்கராயன் ஆற்றுப்படுக்கையில் தொடரும் மணல் அகழ்வைக் கட்டுப்படுத்த உரிய தரப்பினர் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

இது தொடர்பில் அவர்கள் மேலும் தெரிவிக்கையில்,

கிளிநொச்சி அக்கராயன் ஆற்றுப்படுகையில் இருந்து பயணத்தடைகளைப் பயன்படுத்தி சட்டவிரோத மணல் அகழ்வு நடைபெறுகின்றது. கடந்த 10 ஆண்டுகளாக அக்கராயனில் நடைபெறுகின்ற சட்டவிரோத மணல் அகழ்வு தொடர்பாக மாவட்டச் செயலாளர் உட்பட பல்வேறு தரப்பினருக்குத் தகவல்கள் வழங்கப்பட்டும் ஆக்கபூர்வமான நடவடிக்கைகள் எடுக்கப்படாததாலேயே மணல் அகழ்வு தொடர்கின்றது.

கிளிநொச்சி மாவட்டத்தின் இரண்டாவது பெரிய குளமாகிய அக்கராயன் குளத்தின் பயிர்ச்செய்கையைக் கேள்விக்குறியாக்கும் வகையில் இந்த மணல் அகழ்வு இடம்பெறுகின்றது. அக்கராயன் குளத்தில் இருந்து குடமுருட்டிக் குளம் வரையான ஏழு கிலோமீற்றர் தூர ஆற்றுப்படுகையில் தொடரும் மணல் அகழ்வால், விவசாயச் செய்கை பாதிக்கப்பட்டுள்ளதுடன் நிலத்தடி நீரிலும், பாதிப்பு ஏற்படத் தொடங்கியுள்ளது. எனவே மணல் அகழ்வு தொடராது தடுப்பதற்கு அதிகாரிகளும், பொலிஸாரும் தகுந்த நடவடிக்கைகளை எடுக்க வேண்டும். மணல் அகழ்வுக்கு மாவட்டச் செயலகம் அனுமதி வழங்குகின்றபோது, பொது அமைப்புகளின் கருத்துக்களையும் கேட்டறிய வேண்டும் - என்றனர். (ப-13)

# அடிக்கடி மின்சாரம் துண்டிப்பு முல்லையில் மக்கள் நெருக்கடி

முல்லைத்தீவு, ஜூன் 8

முல்லைத்தீவில் அடிக்கடி தடைப்படும் மின்சாரத்தால் பொதுமக்கள் பாதிப்பை எதிர்கொண்டுள்ளனர் என்று சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

இது தொடர்பில் மக்கள் தெரிவிக்கையில்:

அடிக்கடி மின்சாரம் துண்டிக்கப்படுவதால், அன்றாடக் கடமைகளை மேற்கொள்வதில் நெருக்கடி நிலை ஏற்படுகின்றது. மின்சார சபைக்கு தகவல் வழங்கப்பட்டாலும் விரைவாக மின்சாரம் கிடைப்பதில்லை. குறிப்பாக இரவு வேளைகளில் மின்சாரம் தடைப்படுவதால் இருளில் வாழ வேண்டியுள்ளது. இரவு வேளைகளில் இவ்வாறு மின்சாரம் துண்டிக்கப்படும்போது அதிகமான திருட்டுச் சம்பவங்களும் இடம்பெறுகின்றன. எனவே சீரான மின் வழங்க மின்சார சபை உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும் - என்றனர். (ம-13)

# மின்கம்பிகளை ஏற்றிவந்த பாரவூர்தி தடம்புரண்டது

மாங்குளம், ஜூன் 8

மின்கம்பிகளை ஏற்றிவந்த பாரவூர்தி தடம் புரண்டு விபத்துக்குள்ளானது.

இந்த விபத்து நேற்று ஏ-9 மாங்குளம் பகுதியில் அதிகாலை இடம்பெற்றது.

விபத்தில் சாரதி மயிரிழையில் உயிர்தப்பினார். விபத்து தொடர்பில் மாங்குளம் பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர். (ஐ-இ)



## 24 மணி நேரத்தில்
# திருகோணமலையில் தொற்றால் ஐவர் சாவு

திருகோணமலை, ஜூன் 8

திருகோணமலை மாவட்டத்தில் கொரோனாத் தொற்றால் நேற்றுக் காலை 10 மணி வரையான 24 மணி நேரத்தில் ஐவர் உயிரிழந்துள்ளதுடன் 52 பேருக்குத் தொற்று உறுதிசெய்யப்பட்டது.

திருகோணமலை பிராந்திய சுகாதார சேவைகள் திணைக்களத்தால் நேற்று வெளியிடப்பட்ட அறிக்கை ஒன்றிலேயே இவ்வாறு தெரிவிக்கப்பட்டது. (ம-ஐ)

# 50 குடும்பங்களுக்கு உணவுப்பொதிகள்

கொரோனாத் தொற்றுக் காரணமாக வாழ்வாதாரம் பாதிக்கப்பட்ட பெண் தலைமைத்துவக் குடும்பங்களுக்கு உலர் உணவுப்பொதிகள் வழங்கப்பட்டன.

கிளிநொச்சி பச்சிலைப்பள்ளி பிரதேசத்துக்கு உட்பட்ட அல்லிப்பளை, வேம்பொடுகேணி, புலோப்பளை, தர்மக்கேணி மற்றும் இயக்கச்சி ஆகிய கிராமங்களைச் சேர்ந்த 50 குடும்பங்களுக்கே நேற்று உலர் உணவுப்பொதிகள் வழங்கப்பட்டன.

கிளிநொச்சி நியூ சென்சரி லயன்ஸ் கழகமும் தீவகம் லயன்ஸ் கழகமும் இணைந்து இந்த உதவிப் பொருள்களை வழங்கின. (ஐ-9)



தெல்லிப்பழை துர்க்காதேவி தேவஸ்தானத்தில் அமைக்கப்பட்டுள்ள சிவத்தமிழ்ச் செல்வி கலாநிதி தங்கம்மா அப்பாக்குட்டியின் திருவுருவச் சிலைமீது நேற்றுமுன்தினம் இரவு நாகபாம்பொன்று காட்சி கொடுத்துள்ளது. நேற்றுமுன்தினம் காலையும் மாலையும் நயினை ஸ்ரீநாகபூசணி அம்மன் ஆலயத்தில் இராஜ நாகங்கள் காலையும் மாலையும் காட்சி கொடுத்தமை குறிப்பிடத்தக்கது. (ம)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்



## மூடினால் சிக்கல், திறந்தாலும் ஆபத்து!


**மீ**ண்டும் பாடசாலைகளை ஆரம்பிப்பது தொடர்பான கதையாடல்கள் பரவலாக எழத்தொடங்கிவிட்டன. 'முடக்கம் வரும் பின்னே, பாடசாலை மூடப்படும் முன்னே' என்பது போல, இப்போதைய பயணத் தடைக்கு முன்னோட்டமாக பாடசாலைகளே முதலில் மூடப்பட்டன. கடந்த வருடம் மார்ச் மாதம் இலங்கையில் கொரோனா காலுன்றிய பின்னர், பாடசாலைகள் மிகச் சொற்ப காலமே இயங்கின. மிகச் சொற்ப காலம் என்பதை விடவும் மிகச் சில நாள்கள் என்பதே இன்னும் பொருத்தம். அவ்வாறு இயங்கிய நாள்களில் கூட, ஏதேனும் பகுதிகளில் கொரோனாத் தொற்றாளர்கள் இனம்காணப்பட்டால், அந்தப்பகுதி பாடசாலைகள் மூடப்பட்டன.

இப்படி நித்திய கண்டம் பூரண ஆயுசு என்கிற கதையாக பாடசாலைகள் இயங்க ஆரம்பிப்பதும் பின்னர் இழுத்து மூடப்படுவதுமாக இருந்த நிலையில்தான், 'ஒன்லைன் ' வகுப்புகள் பரவலடையத் தொடங்கின. 'சூம்' என்ற செயலியின் மூலம் ஒரே நேரத்தில் ஏராளமான மாணவர்களுக்கு நேரலையாக கற்பிக்கத் தொடங்கினார்கள் ஆசிரியர்கள். முதலில் பாடசாலை வகுப்புக்களே இவ்வாறு 'சூம்' செயலி மூலம் நடக்கத் தொடங்கின. இதனால் பள்ளிக்கூடம் போகாமல் மாணவர்கள் வீட்டிலிருந்த படியே பாடத்திட்டங்களை பூர்த்திசெய்யக்கூடிய நிலை உருவானது. ஆனால் நாளடைவில் தனியார் கல்வி நிலையங்களும் , பிரத்தியேக வகுப்புகளை நடத்துவோரும் வீட்டிலிருந்த படி காசு பார்க்கும் சாதனமாக இந்த 'சூம்' வகுப்புக்களை மாற்றத் தொடங்கினர். கட்டணம் செலுத்துவோருக்கு மட்டுமே அன்றைய வகுப்புகளுக்குரிய 'லிங்கை' அனுப்பி வைப்பதன் மூலம் தமக்குரிய வேதனத்தை அவர்கள் பெறத் தொடங்கினர்.

வகுப்புகளை நடத்துவதற்கான கட்டட வாடகை இல்லை, போக்குவரத்து அலைச்சல் இல்லை, வீட்டில் இருந்த படியே சுளையாக உழைக்கும் வசதி என 'சூம்' அவர்களின் பணம் சம்பாதிக்கும் வழியை இலகுவாக்கியது. இதனால் நாட்டில் இடைப்பட்ட காலத்தில் தோன்றிய இயல்புக்காலத்தில் கூட 'சூம்' வகுப்புகள் தொடரவே செய்தன. ஒருவகையில் மாணவர்களுக்கும் வீட்டில் முடங்கி இருக்கும் காலத்தில் கூட, கற்கைநெறிகளைப் பூர்த்திசெய்ய 'சூம்' வகுப்புகள் உதவினாலும் கூட, இன்னொரு வகையில் மிக இளவயதிலேயே அவர்களுக்கும், கைபேசிகளுக்குமான உறவை வளர்க்கத் தொடங்கியது.

முன்னர் வீட்டில் பிள்ளைகளின் படிப்பைக் குழப்பக் கூடாது என்பதற்காகவே இணைய வசதி, ஸ்மார்ட் போன் என்பவற்றைதீண்டாதிருந்தவர்கள் கூட, இப்போது அதே பிள்ளைகள் படிக்க வேண்டுமென்பதற்காக இணையத்தையும் , ஸ்மார்ட் போனையும் தங்கள் வாழ்வின் ஓர் அங்கமாக்கியுள்ளனர். இப்போதெல்லாம் தரம் ஒன்று படிக்கும் பிள்ளைக்கு கூட தனியாக ஸ்மார்ட் போன் வாங்கிக்கொடுக்க வேண்டிய நிலை. இதனால் கொரோனாவால் நொந்து போயுள்ள குடும்பங்களின் வருமானம், இன்னும் மோசமாக பாதிக்கப்படத் தொடங்கியுள்ளது. அதேசமயம், மலையகம் உள்ளிட்ட இணைய தொடர்பு வசதி பலவீனமாக உள்ள பகுதிகளில் 'சூம்' வகுப்புக்காக மரங்களில் கூட பிள்ளைகள் ஏறி, மணித்தியாலக்கணக்கில் உட்கார்ந்திருக்கிறார்கள். அதைவிட, வகுப்பு நடைபெறாத நேரங்களில் கூட, பிள்ளைகள் ஸ்மார்ட் போனில் இணைய விளையாட்டுகளில் மூழ்கத் தொடங்கியுள்ளனர். பெற்றோரும் அதை அறியாமல், தங்கள் பிள்ளை இணைய வகுப்பில் மணிக்கணக்கில் படிக்கிறான் என்று தூரத்தே நின்று பெருமிதம் கொள்ளும் அவலம்.

முடக்க காலத்தில், படிப்பதற்காக ஸ்மார்ட் போன் உலகத்தில் நுழையும் மாணவர்கள் காலப்போக்கில் அதற்கு அடிமையாகி, கல்வியைக் கவனிக்காமல் விடும் ஆபத்தும் உண்டு.எனவே இயன்றவு வகுப்பறைக் கற்றலை மாணவர்களுக்கு வழங்குவதே சரியான தெரிவு. அதற்காக அவசரப்பட்டு பாடசாலைகளைத் திறப்பது, புதிய கொரோனாக் கொத்தணிகளை உருவாக்கவும் வழி சமைக்கலாம். மாணவர்களின் பாதுகாப்பை உறுதிப்படுத்தி, சுகாதார நடைமுறைகளை சரிவரப்பேணி, கட்டங்கட்டமாக பாடசாலைகளை இயங்க வைக்கலாம். பாடசாலைகளைத் திறந்தாலும் ஆபத்து, மூடினாலும் சிக்கல் என்ற இருதலைக் கொள்ளிநிலையை வெற்றிகரமாக கடக்கும் பொறிமுறையைக் கண்டறிய வேண்டும். அதனூடாகவே எதிர்காலச் சந்ததியின் கல்வியறிவைக் காக்க முடியும்.




### கொவிட் தொற்றுக்குள்ளாகியோர்

# சிகிச்சையின்பின் வீடு திரும்ப போக்குவரத்துச் சிக்கல்நிலை

**கிளிநொச்சி, ஜூன் 8**

**கொரோனாத் தொற்றுக்கு இலக்காகி, சிகிச்சை முடிந்து வெளியேற்றப்படும் மக்கள், வீடுகளுக்குச் செல்வதில் போக்குவரத்துச் சிரமங்களை எதிர்கொண்டுள்ளனர் என்று தெரிவிக்கப்படுகிறது.**

கிளிநொச்சி மாவட்டத்தில் கொரோனாத் தொற்றுக்குள்ளானவர்கள் அடையாளம் காணப்படும்போது அவர்கள் நோயாளர் காவு வண்டி மூலம் கிளிநொச்சி கிருஸ்ணபுரத்தில் அமைந்துள்ள வடக்கு மாகாண தொற்று நோயியல் மருத்துவமனைக்கு அழைத்துச் செல்லப்படுகின்றனர். அங்கு 14 நாள்கள் வரை சிகிச்சைபெறும் நோயாளர்கள், சிகிச்சையின் பின் மருத்துவமனையில் இருந்து வெளியேற்றப்படுகின்றனர். தற்போது பயணக் கட்டுப்பாடு நடைமுறையில் உள்ள நிலையில், சிகிச்சையின் பின் வெளியே அனுப்பப்படும் பொதுமக்கள் தமது வீடுகளுக்குச் செல்ல முடியாது வீதிகளில் அவதிப்படுகின்றனர். குறிப்பாக கிளிநொச்சியில் தொலைதூரக் கிராமங்களிலிருந்து அழைத்துச்செல்லப்படும் கொரோனா நோயாளர்கள், மற்றும் வெளி மாவட்டங்களிலிருந்து சிகிச்சைக்காக வருகின்ற நோயாளர்களே சிகிச்சையின் பின் வீதிகளில் அவலப்படுகின்றனர் என்று சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

நடைமுறையில் உள்ள பயணத் தடை காரணமாக, தொற்றுக் குணமாகி வெளியேற்றப்படுபவர்களை, அவர்களது உறவினர்கள் வீடுகளுக்கு அழைத்துச்செல்வதில் சிரமங்களை எதிர்கொண்டுள்ளனர். எனவே உரிய அதிகாரிகள் குறித்த நபர்கள் தொடர்பில் கவனத்தில்கொண்டு மாற்று ஏற்பாடுகளை மேற்கொள்ள வேண்டும் என்று பாதிக்கப்பட்டவர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

(ம-ப- 113)

# தங்கத்தைத் தேடி சுடலையில் குழி தோண்டிய இருவர் கைது

### வல்வெட்டித்துறையில் சம்பவம்



வல்வெட்டித்துறை, ஜூன் 8

வல்வெட்டித்துறை ஊரிக்காடு மயிலியதனைச் சுடலையில், இறந்தவர்களுடைய நகைகளைத் தேடி, குழி தோண்டிய குற்றச்சாட்டில், வல்வெட்டித்துறை பொலிஸாரால் இருவர் நேற்றுமுன்தினம் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

குறித்த சுடலையின் வாயில் கதவைப் பூட்டி உள்ளே குழி தோண்டப்படுகின்றது என்று இராணுவ புலனாய்வுப் பிரிவினருக்கு கிடைத்த இரகசிய தகவலையடுத்து, சம்பவம் தொடர்பில் இராணுவ புலனாய்வுப் பிரிவினர் பொலிஸாருக்கு அறிவித்த நிலையில், குறித்த இடம் முற்றுகையிடப்பட்டது. இதன்போதே சுடலையில் குழி தோண்டிய குற்றச்சாட்டில், இருவர் பொலிஸாரால் கைதுசெய்யப்பட்டனர். சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளையும் பொலிஸார் மேற்கொண்டனர்.

(ப-20,26)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாடசாலைகளை திறக்காவிடினும் தொலைக்கல்வி முறை தொடரும்

## கல்வியமைச்சர் தெரிவிப்பு



கொழும்பு, ஜூன் 8

கொரோனாத் தொற்றால் மூடப்பட்டுள்ள பாடசாலைகளை மீளத் திறப்பது தொடர்பில் இதுவரை எந்தவொரு தீர்மானமும் மேற்கொள்ளப்படவில்லை. எனினும் தொலைநோக்குக் கல்வி முறைமையில் மாணவர்களுக்கான கற்றல் நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படும் என்று கல்வியமைச்சர் ஜி.எல். பீரிஸ் தெரிவித்துள்ளார்.

அரச தகவல் திணைக்களத்தில் நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

கொரோனாத் தொற்றுக் காரணமாக கல்வித்துறைக்குப் பெரும் சவால் ஏற்பட்டுள்ளது. கடந்த வருடம் பாடசாலைகளின் கற்றல் நடவடிக்கைகள் முழுமையாக இடம்பெறவில்லை. இதனால் மாணவர்கள் உளவியல் ரீதியில் பெருமளவில் பாதிக்கப்பட்டுள்ளனர்.

கடந்த காலத்தை விட தற்போது கொரோனா பெரும்பாதிப்பை ஏற்படுத்தியுள்ளது. இவ்வாறான சூழ்நிலையில் பாடசாலைகளை மீளத் திறக்கும் தீர்மானம் இதுவரையில் எடுக்கப்படவில்லை.

பாடசாலைகளைத் திறக்கும் விவகாரத்தில் மாணவர்களின் சுகாதாரப் பாதுகாப்பு உள்ளிட்ட காரணிகளுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.

குருகெதர மற்றும் இலத்திரனியல் முறைமை ஊடாக தற்போது மாணவர்களின் கற்றல் நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படுகின்றன. தொலைநோக்குக் கல்வி முறைமை மாணவர்களுக்கு முழுமையான கற்பித்தலை வழங்கும் என்று குறிப்பிட முடியாது.

இருப்பினும் தற்போதைய நெருக்கடியான சூழ்நிலையில் இதனைத் தவிர்க்கவும் முடியாது. தொலைநோக்குக் கல்வி முறைமை ஊடாக கற்றல் நடவடிக்கைகளை விரிவுப்படுத்தத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

அதேவேளை 2021ஆம் ஆண்டுக்கான கல்விப் பொதுத்தராதர சாதாரண தரம் மற்றும் உயர்தரப் பரீட்சைக்குத் தோற்றும் மாணவர்களின் பாடத்திட்டத்தை முழுமைப்படுத்த தொலைக்காட்சி சேவை ஊடாக கற்பித்தலை முன்னெடுக்கத் தீர்மானிக்கப்பட்டுள்ளது - என்றார். (ம-4)



# ஓவியர் இளையராஜா கொவிட்டுக்குப் பலி!

சென்னை, ஜூன் 8

தமிழகத்தின் பிரபல ஓவியர் இளையராஜா கொவிட் தொற்றால் உயிரிழந்துள்ளார். மூச்சுத் திணறல் காரணமாக எழும்பூரில் உள்ள தனியார் மருத்துவமனையில் சேர்க்கப்பட்ட இவர், சிகிச்சை பயனின்றி உயிரிழந்துள்ளார்.


43 வயதான இளையராஜா கும்பகோணம் அருகே உள்ள செம்பியவரம்பல் என்ற கிராமத்தைச் சேர்ந்தவர். 2003ஆம் ஆண்டு நடைபெற்ற ஓவியக் கண்காட்சிக்குப் பின்னர் இவரது ஓவியங்களுக்கு தனி ரசிகர்கள் உருவாகினர். 2010ஆம் ஆண்டு முதல் இவரது ஓவியங்கள் பிரபல வார இதழில் இடம்பெற ஆரம்பித்த பின்னர் இவரது புகழ் எங்கும் பரவியது.

தமிழக, கிராமப்புற பெண்களின் வாழ்க்கையை அப்படியே படம்பிடித்துக் காட்டும் அளவுக்கு தத்ரூபமாக ஓவியங்களை வரையக் கூடிய திறமை பெற்றவர் இளையராஜா.

கடந்த வாரம் கும்பகோணம் சென்று திரும்பிய இளையராஜாவுக்கு சளி மற்றும் மூச்சுத் திணறல் இருந்துள்ளது. ஆரம்பத்தில் மருத்துவ சிகிச்சை எடுக்காது, மருந்தகங்களில் மருந்து எடுத்துள்ளார். எனினும் அவரது உடல் நிலை மோசமடைந்ததை அடுத்து, எழும்பூரில் உள்ள தனியார் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டார். அவரது நுரையீரல் மோசமாகப் பாதிப்படைந்ததால், தீவிர சிகிச்சை அளித்தும் பயனளிக்கவில்லை. நேற்று நள்ளிரவு அவர் மாரடைப்புக் காரணமாக உயிரிழந்துள்ளார். (எ-இ)

# விமர்சனத்துக்கு அஞ்சோம் கொரோனாவை அழிப்போம்

## நிமல் லான்சா தெரிவிப்பு



கொழும்பு, ஜூன் 8

அரசால் முன்னெடுக்கப்பட்டு வரும் சகல வேலைத்திட்டங்களையும் விமர்சிப்பதே எதிர்க்கட்சியினரின் வேலை. எனினும் கொரோனாவை இல்லாதொழிப்பதற்கான நடவடிக்கைகளைத் தொடர்ந்து முன்னெடுப்போம் இவ்வாறு கிராமிய வீதிகள் மற்றும் ஏனைய உட்கட்டமைப்பு வசதிகள் இராஜாங்க அமைச்சர் நிமல் லான்சா தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

கொரோனாவைக் கட்டுப்படுத்துவதே அரசின் பிரதான நோக்கமாகும். இதற்காக முன்னெடுக்கப்படும் தடுப்பூசி வழங்கும் வேலைத்திட்டம் வெற்றிகரமாக முன்னெடுக்கப்பட்டுள்ளமை சுகாதார சேவையின் வெற்றியாகும்.

நாட்டில் போக்குவரத்துக் கட்டுப்பாடுகள் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளபோதிலும், மக்களுக்கு அசௌகரியம் ஏற்படாத வகையில் அத்தியாவசிய சேவைகளும் முன்னெடுக்கப்பட்டுள்ளன.

இவை தொடர்பில் எதிர்க்கட்சியினரால் கடுமையாக விமர்சிக்கப்பட்டாலும், அவை வெற்றிகரமாக முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. உலக சுகாதார ஸ்தாபனத்தால் வரையறுக்கப்பட்டுள்ள வயதெல்லைக்குட்பட்ட சகலருக்கும் இந்த வருட இறுதிக்குள் தடுப்பூசி வழங்குவதே அரசின் இலக்காகும்.

இன்று நல்லாட்சி அரசு ஆட்சியில் இருந்திருந்தால் முழு நாடும் பாதிக்கப்பட்டிருக்கும். 30 வருடங்களான போரை நிறைவுக்கு கொண்டுவர முடியாது என்று எதிர்த் தரப்பினரால் விமர்சிக்கப்பட்டபோதிலும் அதனை எம்மால் வெற்றிகொள்ள முடிந்தது. அதேபோன்று கொவிட்-பரவலும் வெற்றிகரமாகக் கட்டுப்படுத்தப்படும் என்றார். (ம-4)

# உருமாறிய வைரஸ் தொடரும் ஆய்வுகள்

கொழும்பு, ஜூன் 8

கொழும்பு மற்றும் அதன் புறநகர் பகுதிகளில் பரவிவரும் உருமாறிய கொரோனா வைரஸ் தொடர்பில், சிறி ஜெயவர்தனபுர பல்கலைக்கழகம் ஆராய்ச்சிகளை ஆரம்பித்துள்ளது. இலங்கையில் தற்போது பரவும் வைரஸ் உருமாறியதா அல்லது ஒரு திரிபா என்று இந்த ஆராய்ச்சிகளின் மூலம் கண்டறிய முடியும் என்று பல்கலைக்கழகத்தின் நுண்ணுயிரியல் துறையின் பேராசிரியர் கலாநிதி சந்திம ஜீவந்தர தெரிவித்துள்ளார்.

இலங்கையில் ஏற்கனவே பரவியது பிரிட்டனின் உருமாறிய திரிபு வைரஸ் என்று கடந்த ஏப்ரல் மாதம் நடத்தப்பட்ட ஆராய்ச்சியில் தெரியவந்தது. எனினும் நாட்டில் மேலும் சில திரிபுகள் பரவுகின்றனவா என்பதை தற்போது முன்னெடுக்கப்படும் ஆராய்ச்சிகள் மூலம் கண்டறிய முடியும். இன்னும் மூன்று நாள்களில் ஆராய்ச்சிகளின் முடிவுகள் வெளியிடப்படும் என்றும் அவர் தெரிவித்துள்ளார். (ம-4)



# அனைத்திலும் அதிகாரம் படுகுழியை நோக்கி நாடு

## ஐக்கிய மக்கள் சக்தி தெரிவிப்பு

கொழும்பு, ஜூன் 8

அரசு தனது அதிகாரத்தின் கீழுள்ள அனைத்தையும் கட்டுப்படுத்துவதற்கு முயல்கின்றது. அதனால் படுகுழியை நோக்கி நாடு நகர்ந்து கொண்டிருக்கின்றது இவ்வாறு ஐக்கிய மக்கள் சக்தி கடுமையாகச் சாடியுள்ளது.

இது தொடர்பில் ஐக்கிய மக்கள் சக்தியின் பொதுச்செயலாளர் ரஞ்சித் மத்தும பண்டார தெரிவிக்கையில்,

அரசின் பகுத்தறிவற்றதும், நடைமுறைக்குப் பொருத்தமற்றதுமான தீர்மானங்களின் விளைவாக தற்போது நாடு படிப்படியாக படுகுழிக்குள் தள்ளப்பட்டு வருகின்றது. நாட்டைப் புலமைத்துவப்பாதையில் அழைத்துச் செல்வோம் எனக் கூறியே ஆட்சிபீடமேறினர். ஆனால் தற்போது அதற்கு மாறாகச் செயற்பட்டு வருகின்றனர்.

இரசாயன உரங்களை இறக்குமதி செய்வதற்குத் தடைவிதித்துள்ள நிலையில், பொருளாதாரத்துக்குப் பெரும் நெருக்கடி ஏற்பட்டுள்ளது.

உலகின் எந்தவொரு நாடும் காபனேற்றம் செய்யப்பட்ட உரங்களை மாத்திரம் பயன்படுத்தி விவசாய நடவடிக்கைகளில் ஈடுபடவில்லை.

சில நாடுகள் குறிப்பிட்ட சந்தையின் தேவையைப் பூர்த்திசெய்வதற்காகவே காபனேற்றம் செய்யப்பட்ட உரங்களைப் பயன்படுத்துகின்றன.

இலங்கையில் நெற்பயிர்ச்செய்கை, தேயிலை, உருளைக்கிழங்கு மற்றும் மரக்கறிச்செய்கை என்பவை ஏற்கனவே நெருக்கடியில் உள்ளன. சரியான திட்டமிடலுக்குப் பின்னரே காபனேற்றம் செய்யப்பட்ட காபனிக் உரங்களைப் பயன்படுத்த ஆரம்பிக்க வேண்டும். காபனேற்றம் செய்யப்பட்ட உரங்கள் என்ற போர்வையில் சீனாவின் நகரக் கழிவுகளை இறக்குமதி செய்வதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்படுகின்றனவா? என்ற சந்தேகமும் எழுகின்றது.

விவசாய அமைச்சின் செயலாளர் பதவி விலகியுள்ளமை மூன்று மாதங்களில் இது இரண்டாவது முறையாகும். இதற்கு முக்கிய காரணம், அரசால் தன்னிச்சையாக மேற்கொள்ளப்படும் அறிவுபூர்வமற்ற தீர்மானங்களேயாகும்.

கொரோனா நெருக்கடியின்போதும் சுகாதாரத்துறை அதிகாரிகளைப் புறந்தள்ளி, அரசு வெறுமனே அரசியல் ரீதியில் தீர்மானங்களை மேற்கொண்டது- என்றார். (ம-4)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# அரசால் 12 மாதத்துக்குள் ரூ.2,000 பில்லியன் கடன்

**கொழும்பு, ஜூன் 8**
**ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ச தலைமையிலான அரசால், 12 மாதங்களுக்குள் 2 ஆயிரம் பில்லியன் ரூபா கடன் பெறப்பட்டுள்ளது.**



இவ்வாறு ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் ஹர்ச டி சில்வா தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், கடந்த வரவு செலவுத் திட்டத்தில் துண்டுவிழும் தொகை 11.1 வீதம் என்று அரசு கூறுகின்றபோதும், உண்மையில் துண்டுவிழும் தொகை 14.1 வீதமாகும்.

அரசு பொய் கூறி நாட்டு மக்களையும், சர்வதேசத்தையும் ஏமாற்றி வருகின்றது. நல்லாட்சி அரசு அதிக கடன்பெற்றது என்று விமர்சனம் செய்தனர். இன்று இவர்கள் இரண்டு, மூன்று மடங்கு அதிக கடன் பெற்றுள்ளனர். இவ்வாறு பெற்றுக்கொண்ட கடனை அரசு என்ன செய்தது- என்றார். (எ-4)

# அடுத்த வருடத்தில் நாமல்தான் பிரதமர்

## பிரபல ஜோதிடர் தகவல்

கொழும்பு, ஜூன் 8
இலங்கையின் பிரதமராக அமைச்சர் நாமல் ராஜபக்ச நியமிக்கப்படுவார் என்று பிரபல ஜோதிடர் விஜித ரோஹன விஜயமுனி தெரிவித்துள்ளார்.

2022ஆம் ஆண்டு செப்ரெம்பர் மாதத்துக்குள் அவர் பிரதமராக நியமிக்கப்படுவார். எனினும் அவருக்கு ஒரு நாளும் இலங்கையின் ஜனாதிபதியாகும் அளவுக்கு பலமான கிரகயோகம் இல்லை. நாமல் ராஜபக்ச பிறந்த நேரத்துக்கமைய அவருடைய கிரகங்கள் எவையும் அன்றைய தினம் சக்தி வாய்ந்தவையாகக் காணப்படவில்லை என்றும் அவர் தெரிவித்துள்ளார். (எ-4)

# வீட்டிலிருந்து இளம் தம்பதி சடலமாக மீட்பு

கொழும்பு, ஜூன் 8
வெல்லவாய்ப் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பகுதியில், வீடொன்றிலிருந்து இளம் தம்பதி சடலமாக மீட்கப்பட்டுள்ளனர்.

எம்பிலிபிட்டிய மற்றும் ஹெட்டிபொல பகுதியைச் சேர்ந்தவர்களே இவ்வாறு சடலங்களாக மீட்கப்பட்டுள்ளனர். குறித்த இருவரும் வெல்லவாயப் பகுதியில் உள்ள குறித்த வீட்டில் வாடகைக்கு வசித்து வந்துள்ளனர்.

இந்த நிலையில், இருவரும் தற்கொலை செய்திருக்கலாம் என்று பொலிஸார் சந்தேகம் வெளியிட்டுள்ளனர். எனினும் இதுவரை உறுதிப்படுத்தப்படவில்லை. சம்பவம் தொடர்பில் வெல்லவாய பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர். (எ-4)

# 5 மேம்பாலங்கள் திட்டம் ஆரம்பம்

கொழும்பு, ஜூன் 8
கொழும்பில் போக்குவரத்து நெரிசல் நிலவும் பகுதிகளில் ஐந்து மேம்பாலங்களை நிர்மாணிக்கும் திட்டம், பிரதமர் மஹிந்த ராஜபக்சவால் நேற்று ஆரம்பிக்கப்பட்டது.

அலரி மாளிகைக்கு அழைக்கப்பட்ட விருந்தினர்கள் கொண்ட சிறு குழுவினர் முன்னிலையில், சுகாதார வழிகாட்டுதல்களுக்கு இணங்க இந்தத் திட்டம் ஆரம்பிக்கப்பட்டது.

கொஹுவல சந்தி மற்றும் கெட்டம்பே சந்தி மற்றும் ஸ்லேவ் ஐலண்ட் ரயில் நிலையம் அருகில் மேம்பாலங்கள் அமைக்கப்படும். அத்துடன் பேர வாவியை ஊடறுத்து ஒரு மேம்பாலமும், ஸ்லேவ் ஐலண்ட் பால தக்ச மாவத்த, சிற்றம்பலம் ஏ கார்டினர் மாவத்தையை இணைத்து ஒரு மேம்பாலம் அமைக்கப்படும்.

அதேவேளை சீனாவின் ஹார்பர் இன்ஜினியரிங் நிறுவனத்தால் புதிய களனி பாலம் முதல் அத்துருகிரிய வரையான உயரமான நெடுஞ்சாலைக்கான திட்டமும் ஆரம்பிக்கப்பட்டது.

சுமார் 36 மாதங்களில் நெடுஞ்சாலைக்கான புனரமைப்புப் பணிகளை நிறைவுசெய்ய அமைச்சரவை அமைச்சர்களின் அனுமதி வழங்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (எ-4)

# ஈராகண்டியில் அவசரமாக தரையிறங்கிய விமானம்

திருமலை, ஜூன் 8
இலங்கை விமானப் படைக்குச் சொந்தமான பயிற்சி விமானமொன்று, தொழில்நுட்பக் கோளாறு காரணமாக, திருகோணமலை நிலாவேலி கடற்கரைக்கு வடக்கே உள்ள ஈராகண்டி பகுதியில் அவசர அவசரமாக தரையிறங்கியது.

நேற்று முற்பகல் 10:22 மணிக்கு சீனா வளைகுடாவில் இருந்து புறப்பட்ட விமானம், 10:48 மணிக்கு அவசர அவசரமாகத் தரையிறங்கியது. சம்பவம் நடந்த நேரத்தில் இரண்டு விமானிகள் செஸ்னாவில் இருந்தனர். இருவரும் காயமடையவில்லை என்று இலங்கை விமானப்படைப் பேச்சாளர் குரூப் கெப்டன் துஷன் விஜேசிங்க தெரிவித்தார். இரு விமானிகளின் திறமையால் ஒரு பேரழிவு தவிர்க்கப்பட்டது என்று இலங்கை விமானப்படை தெரிவித்துள்ளது. எனினும், இது குறித்து விசாரணை நடத்த விமானப்படை தளபதி ஏர் மார்ஷல் சுதர்ஷனா பத்ரன சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்குப் பணித்துள்ளார். (எ-4)

# கஞ்சா கடத்திய போலி மருத்துவர்


கொழும்பு, ஜூன் 8
மருத்துவர் என்ற போர்வையில் காரில் ஒரு தொகை கஞ்சாவைக் கடத்தினார் என்ற குற்றச்சாட்டில், மருதானைப் பகுதியில் ஒருவர் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

அவரிடமிருந்து 38 கிராம் கஞ்சா மீட்கப்பட்டுள்ளது. இதனையடுத்து அவரிடம் மேற்கொள்ளப்பட்ட விசாரணைகளில், அவர் மருத்துவர் இல்லை என்பது தெரியவந்தது. இதேவேளை, மருதானைப் பகுதியில், கடற்படையினர் பயன்படுத்தும் ஆடை அணிந்திருந்த நபரொருவரிடமிருந்து ஐஸ் மற்றும் கஞ்சா மீட்கப்பட்டுள்ளது. அவரிடமிருந்து 5 கிராம் ஐஸ் போதைப்பொருளும், 610 மில்லி கிராம் கஞ்சாவும் கைப்பற்றப்பட்டன என்று பொலிஸார் தெரிவித்தனர். (எ-4)

# கொரோனா விவகாரத்துக்குள் அரசியல் தலையீடு தாராளம்

## தொழில்நுட்பவியலாளர்கள் சங்கம் சுட்டிக்காட்டு

கொழும்பு, ஜூன் 8
கொரோனாத் தொற்றைக் கட்டுப்படுத்துவதற்கான நடவடிக்கைகளில் அரசியல் தலையீடு தாராளமாக உள்ளது. எனினும் சுயாதீனமாக இயங்க அனுமதித்தால் மட்டுமே சுகாதாரத் துறையினர் வெற்றிபெற முடியும்.



இவ்வாறு அரச மருத்துவ ஆய்வுகூட தொழில்நுட்பவியலாளர்கள் சங்கம் சுட்டிக்காட்டியுள்ளது. இது தொடர்பில் அதன் தலைவர் ரவி குமுதேஸ் தெரிவிக்கையில்,

சுகாதாரப் பணியாளர்களின் பிரச்சினைகளைச் செவிமடுத்து, தீர்வுகளை முன்வைக்க வேண்டியது அரசின் கடமை.

தற்போதைய நெருக்கடிக்குள் முக்கியமான தீர்மானங்கள் அரசியல் நலன்களை அடிப்படையாக வைத்தே எடுக்கப்படுகின்றன. அனைத்து விடயங்களையும் அரசு அரசியல்மயப்படுத்தக் கூடாது. சுயாதீனமாக முடிவெடுப்பதற்கும் அனுமதி வழங்கப்பட வேண்டும் என்றார். (எ-4)

# கல்வி அமைச்சுக்கு எதிராக உயர்நீதிமன்றில் வழக்கு

## இலங்கை ஆசிரியர் சங்கத்தின் பொதுச் செயலாளர் ஸ்ராலின் தெரிவிப்பு

கொழும்பு, ஜூன் 8
அரசு எடுத்துள்ள தீர்மானத்துக்கு எதிராக உயர்நீதிமன்றில் வழக்குத் தொடரவுள்ளோம் என்று இலங்கை ஆசிரியர் சங்கத்தின் செயலாளர் ஜோசப் ஸ்டாலின் தெரிவித்துள்ளார். 2022ஆம் ஆண்டு தொடக்கம் முதலாம் தரத்தில் 45 மாணவர்களை இணைத்து கொள்வது தொடர்பாகவே வழக்குத் தொடரவுள்ளோம். இது தொடர்பாக ஏற்கனவே உயர்நீதிமன்றம் வழங்கிய தீர்ப்பை மீறியே, கல்வியமைச்சு செயற்பட்டுள்ளது என்றும் அவர் குற்றம் சுமத்தியுள்ளார். (து-இ)

# போதைப்பொருள் கடத்தல்: பணத்துடன் தம்பதி கைது

கொழும்பு, ஜூன் 8
போதைப்பொருள் கடத்தல் குற்றச்சாட்டில், பெருந்தொகைப் பணத்துடன் தம்பதியர் கைதுசெய்யப்பட்டுள்ளனர் என்று பொலிஸார் தெரிவித்தனர். குடு அஞ்சு என்று அழைக்கப்படும் போதைப்பொருள் வியாபாரியின், சகோதரரின் மகன் மற்றும் அவரது மனைவியே இவ்வாறு கைதுசெய்யப்பட்டுள்ளனர். சந்தேகநபர்களிடம் இருந்து 2 பணம் எண்ணும் இயந்திரங்கள், 4 கையடக்கத் தொலைபேசிகள், 5 கிராம் ஐஸ் போதைப்பொருள் மற்றும் 14 லட்சம் ரூபா பணம் ஆகியவை பறிமுதல் செய்யப்பட்டன என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர். (எ-4)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# பேர்ள் கப்பல் விவகாரத்தை ஆராய்வதற்குத் தெரிவுக்குழு

## ரணில் வலியுறுத்து



**கொழும்பு, ஜூன் 8**

**இலங்கைக் கடற்பரப்பில் தீப்பற்றிய எக்ஸ்பிரஸ் பேர்ள் கப்பல் விவகாரத்தை ஆராய நாடாளுமன்றில் தெரிவுக்குழு அமைக்கப்பட வேண்டும். எனவே இந்த வாரம் நாடளுமன்றம் கூடியவுடன், தெரிவுக்குழுவை நியமித்து, ஜூலை மாதம் முதலாம் வாரம் இது தொடர்பான அறிக்கையை முன்வைக்க வேண்டும் - இவ்வாறு முன்னாள் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க வலியுறுத்தியுள்ளார்.**

அவர் மேலும் தெரிவிக்கையில்,

கொழும்பு துறைமுகத்துக்குள் கப்பலை அனுமதித்திருந்தால், அதிலிருந்து ஏற்பட்ட வெடிப்புகளால், ஷங்ரிலா ஹொட்டல் வரையான அனைத்துக் கட்டிடங்களும் தரை மட்டமாகியிருக்கும்.

இதன் பாதிப்பை மட்டுப்படுத்தியிருக்கலாம். ஆனால் அதற்கான நடவடிக்கை ஏன் எடுக்கவில்லை?. எமது பொருளாதாரம் மற்றும் சுற்றாடல் பாதிப்பு குறித்து சிந்திக்க வேண்டும். நைட்ரிக் இரசாயனம் கடலில் கலப்பதால், கொழும்பு கடல் பிரதேசத்திலுள்ள முருங்கைக் கற்பாறைகள் அழிவடையலாம். இந்தப் பாறைகளால் தான் சுனாமியிலிருந்து எமது நாடு தப்பியது. அந்தப் பாதுகாப்பு இப்போது இல்லை.

இந்த விவகாரம் தொடர்பில் ஜனாதிபதி, பிரதமர், அமைச்சர்கள், எதிர்க்கட்சி தலைவர் மற்றும் எதிர்க்கட்சி உறுப்பினர்கள் ஐவருடன், சபையைக் கூட்டி அடுத்த தீர்மானத்தை எடுத்திருக்க வேண்டும், ஆனால், தீர்மானம் எதுவும் எடுக்கப்படவில்லை. அவ்வாறு கூடி முடிவெடுத்து, தேசிய அனர்த்த நிலைமை அறிவிக்கப்பட்டிருந்தால், அதனூடாக வெளிநாடுகளிலிருந்து நிவாரணங்களைப் பெற்றிருக்கலாம்.

ஆனால் இந்தியாவிலிருந்து மாத்திரமே நாம் உதவி பெற்றோம். அதுவும் போதுமானளவு இருக்கவில்லை. ஆனாலும், இது தொடர்பான மேலதிக தெரிவு ஐரோப்பிய மற்றும் கிழக்கு ஆசிய நாடுகளுக்கே உள்ளது - என்றார். (எ-4)

# பேர்ள் கப்பல் விவகாரம் மற்றொரு குழு நியமனம்

கொழும்பு, ஜூன் 8



எக்ஸ்பிரஸ் பேர்ள் கப்பலின் தொடர்பாடல் கட்டமைப்பைப் பகுப்பாய்வு செய்வதற்காக, மற்றுமொரு குழுவை நியமிக்க, அரச இரசாயனப் பகுப்பாய்வு திணைக்களம் தீர்மானித்துள்ளது.

கணினி குற்றப்பிரிவு அதிகாரிகள் இந்தக் குழுவில் உள்ளடக்கப்படுவர் என்று திணைக்களம் தெரிவித்துள்ளது.

அதற்கமைவாக கப்பல் தீப்பற்றிய சம்பவம் தொடர்பிலான விசாரணைகளுக்காக அரச இரசாயனப் பகுப்பாய்வு திணைக்களத்தில் இருந்து மாத்திரம் இரண்டு குழுக்கள் நியமிக்கப்பட்டுள்ளன.

இதனிடையே, குறித்த கப்பல் மூழ்கிக் கொண்டுள்ள கடற்பிராந்தியத்தில் இருந்து பெறப்பட்ட நீர் மாதிரி ஆய்வுக்கு உட்படுத்தப்பட்டுள்ளது என்றும் அரச இரசாயனப் பகுப்பாய்வுத் திணைக்களம் தெரிவித்துள்ளது. (ம-எ.4)



# 68 கர்ப்பிணிகளுக்கு பி.சி.ஆர். சோதனை!

மட்டக்களப்பு, ஜூன் 8

வாழைச்சேனை சுகாதார வைத்திய அதிகாரி பிரிவில் நேற்று திங்கட்கிழமை 68 கர்ப்பிணிகளுக்குப் பி.சி.ஆர். சோதனைகள் செய்யப்பட்டன.

அங்கு கொரோனாத் தொற்றால் ஒரு கர்ப்பிணி உயிரிழந்துள்ள நிலையிலேயே மேற்படி 68 பேருக்குப் பி.சி.ஆர் சோதனைகள் செய்யப்பட்டன. (ம-150)

# பயணத்தடையால் மாற்றங்களில்லை

## பேராசிரியர் திஸ்ஸ தெரிவிப்பு

கொழும்பு, ஜூன் 8

நாட்டில் கொரோனாத் தொற்றைக் கட்டுப்படுத்தும் நோக்கில், நடைமுறைப்படுத்தப்பட்டுள்ள பயணத் தடையால் எவ்வித மாற்றங்களும் ஏற்படவில்லை என்று நாடாளுமன்ற உறுப்பினர் பேராசிரியர் திஸ்ஸ விதாரண தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

கொரோனாத் தொற்றைக் கட்டுப்படுத்தும் நோக்கில் தற்போது நடைமுறைப்படுத்தப்பட்டுள்ள செயற்றிட்டங்கள் அதிருப்தியளித்துள்ளன.

விசேட மருத்துவ நிபுணர்களின் கருத்துக்களுக்கு முன்னுரிமை வழங்குவது அவசியம். அதற்கமைவாக பிரச்சினைகளுக்கு விரைவில் தீர்வுகாண வேண்டும்.

அதேவேளை பயணக் கட்டுப்பாடு நடைமுறையில் உள்ள காலப் பகுதியில் அத்தியாவசியப் பொருள்களை மக்கள் பெற்றுக்கொள்ள விசேட செயற்றிட்டத்தைச் செயற்படுத்த வேண்டும்.

அங்காடி விற்பனை ஊடாக அத்தியாவசியப் பொருள்கள் விற்பனை செய்யப்பட்டு வரும் இந்நிலையில், அதனைப் பெற்றுக்கொள்வதற்குத்



தேவையான வசதிகள் பெரும்பாலான மக்களிடம் இல்லை.

எனவே சிறந்த திட்டங்களைச் செயற்படுத்துமாறு தனிப்பட்ட முறையில் பிரதமர் மஹிந்த ராஜபக்சவிடம் கோரிக்கை விடுக்கின்றேன் - என்றார். (எ-4)



# அபிவிருத்திகளை கைவிட முடியாது

## இராஜாங்க அமைச்சர் தெரிவிப்பு

கொழும்பு, ஜூன் 8

போர்க்காலத்தில் திட்டமிடப்பட்ட அபிவிருத்திகள் படிப்படியாக முன்னெடுக்கப்பட்டதன் காரணமாக, போரின் பின்னர் பெரும் பொருளாதார வளர்ச்சி இலங்கையில் ஏற்பட்டது. எனவே தற்போதுள்ள கொரோனா நெருக்கடிக்கு மத்தியிலும், துறைசார் அபிவிருத்தி நடவடிக்கைகளை கைவிட முடியாது இவ்வாறு நிதி, மூலதனச்சந்தை மற்றும் அரச தொழில் முயற்சி மறுசீரமைப்பு இராஜாங்க அமைச்சர் அஜித் நிவாட் கப்ரால் தெரிவித்துள்ளார்.

இலங்கை முதலீட்டு மாநாடு, ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்சவால் இணையவழியின் ஊடாக நேற்று உத்தியோகபூர்வமாக ஆரம்பிக்கப்பட்டது. அதில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

முதலீட்டை ஊக்குவிப்பதில் கவனம் செலுத்துவதற்குப் பொருத்தமான நேரம் இதுவல்ல என்று சிலர் கூறுகின்றனர். பெரும்பாலான உலகநாடுகள் முடக்கப்பட்டிருக்கும் சூழ்நிலையில், சுற்றுலாத்துறை போன்ற முக்கிய துறைகள் இயங்க முடியாத தருணத்தில், இவற்றுக்கு எப்போது தீர்வு காணப்படும் என்று தெரியாது. இந்த நிலையில், இலங்கையில் முதலீடுகளை மேற்கொள்ளுமாறு முதலீட்டாளர்களிடம் எவ்வாறு கோர முடியும்.

இலங்கையின் உட்கட்டமைப்பு வசதிகளின் அபிவிருத்தி 2006ஆம் ஆண்டில் மஹிந்த ராஜபக்ச ஜனாதிபதியாகப் பதவி வகித்த காலப்பகுதியில் ஆரம்பிக்கப்பட்டது.

போர் இடம்பெற்று வந்த காலப்பகுதியில் உட்கட்டமைப்பு வசதிகளை அபிவிருத்தி செய்யவேண்டியதன் அவசியம் என்ன என்று பலரும் கேள்வி எழுப்பினர். ஆனால் அந்தக் காலப்பகுதியில் அம்பாந்தோட்டை துறைமுகம், நுரைச்சோலை அனல் மின்னுற்பத்தி நிலையம், அதிவேக நெடுஞ்சாலைகள், விமான நிலையங்கள் உள்ளிட்ட அனைத்தையும் அபிவிருத்தி செய்வதற்கான நடவடிக்கைகளை மேற்கொண்டோம்.

அதனால் தான் போர் முடிவடைந்ததன் பின்னர், மிகவேகமாக வளர்ச்சியை நோக்கிப் பயணிக்கக்கூடிய அடித்தளம் இலங்கையிடம் காணப்பட்டது. அதனாலேயே இலங்கையால் 8 வீத பொருளாதார வளர்ச்சியையும் அடைந்து கொள்ள முடிந்தது. இவை எவையும் சடுதியாக இடம்பெற்ற மாற்றங்கள் அல்ல. மாறாக படிப்படியாகத் திட்டமிட்டு முன்னெடுக்கப்பட்ட நடவடிக்கைகளால் கிடைக்கப்பெற்ற அடைவுகளாகும்.

2014ஆம் ஆண்டில் இலங்கையின் மூலதனச் சந்தைப் பெறுமதி 24.4 பில்லியன் அமெரிக்க டொலராகக் காணப்பட்டது. எனினும் 2021ஆம் ஆண்டில் அதன் பெறுமதி 14.5 பில்லியன் அமெரிக்க டொலர் மாத்திரமேயாகும். ஆகவே 7வருடத்துக்குள் இதில் சடுதியாக வீழ்ச்சியொன்று ஏற்பட்டுள்ளது.

தற்போது முதலீடு செய்யக்கூடிய நிறுவனங்களால் பெருமளவான இலாபத்தை ஈட்டிக்கொள்ள முடியும். கொரோனாத் தொற்றுப் பரவலால் ஏற்பட்டுள்ள நெருக்கடிநிலை மற்றும் சவால்களின் காரணமாக நாம் ஒருபோதும் எமது இலக்கை மறந்துவிடக்கூடாது - என்றார். (எ-4)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இஸ்ரேலில் திருப்பம் கைமாறுகிறது ஆட்சி

## நெதன்யாகுவின் ஆட்சிக்கு முற்றுப்புள்ளி



**டெல்அவிவ், ஜூன் 8**

**இஸ்ரேலில் 15 ஆண்டுகளாக பிரதமர் பதவியை வகித்துவரும் பெஞ்சமின் நெதன்யாகுவின் ஆட்சிக்கு அங்கு முற்றுப்புள்ளி வைக்கப்பட்டுள்ளது. வரலாற்றில் முதல் முறையாக எதிர்க்கட்சிகள் இணைந்து ஆட்சியமைக்கவுள்ளன.**

2009ஆம் ஆண்டிலிருந்து இஸ்ரேலின் பிரதமராக நெதன்யாகு பதவி வகித்து வருகின்றார்.

இந்த நிலையில் நெதன்யாகு மீது ஊழல், மோசடி மற்றும் நம்பிக்கை மோசடி முறைப்பாடுகள் கடந்த சில வருடங்களாக எழுந்து வந்தன.

நெதன்யாகு பதவி விலகக்கோரி ஜெருசலேம் உள்ளிட்ட பகுதிகளில் போராட்டங்களும் நடைபெற்று வந்தன. எனினும் தொடர்ந்து நெதன்யாகு தனது பதவியைத் தக்கவைத்து வந்தார்.

இந்த நிலையில் இஸ்ரேலில் அரபுக் கட்சி தலைமையில் 8 அரசியல் கட்சிகள் கூட்டாக இணைந்து நெதன்யாகுவின் ஆட்சிக்குத் தற்போது முற்றுப்புள்ளி வைத்துள்ளன. இதனை யேஷ் அடிட் கட்சியின் தலைவர் யேர் லேபிட் அதிகாரபூர்வமாக அறிவித்துள்ளார்.

இந்தக் கூட்டணிக் கட்சிகள் சுழற்சி முறையில் பிரதமர் பதவியைப் பகிர்ந்துகொள்ள உள்ளன. இதன்படி வலதுசாரி கட்சியான யாமினா கட்சியின் தலைவர் பென்னெட் பிரதமராகப் பதவி ஏற்பார் என்று ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன. இஸ்ரேல் நாடாளுமன்றத்தில் நடைபெற இருக்கும் நம்பிக்கை வாக்கெடுப்பில் இக் கூட்டணிக் கட்சிகள் வெற்றி பெற வேண்டும். நம்பிக்கை வாக்கெடுப்பில் வெற்றி பெற 61 உறுப்பினர்களின் ஆதரவு தேவைப்படுகிறது.

கடந்த மார்ச் மாதம் நடைபெற்ற நாடாளுமன்றத் தேர்தலில் நெதன்யாகுவின் லிகுட் கட்சி அதிக இடங்களில் வென்றது.

ஆனாலும் பெரும்பான்மைக்குத் தேவையான இடங்கள் கிடைக்கவில்லை. இதனைத் தொடர்ந்து ஆட்சியைத் தக்கவைப்பதில் நெதன்யாகுவுக்கு சிக்கல் நீடித்து வந்தது. இந்த நிலையில் நெதன்யாகுவுக்கு எதிராக எதிர்க்கட்சிகள் கூட்டணி அமைத்துள்ளன. (ம)



# 60 வீத தடுப்பூசிகள் மூன்று நாடுகளுக்கே

## உலக சுகாதார நிறுவனம் கவலை

வொஷிங்டன், ஜூன் 8

உலக அளவில் இதுவரை விநியோகிக்கப்பட்ட 200 கோடி கொரோனாத் தடுப்பூசிகளில் 60 வீதமான தடுப்பூசிகள் மூன்று நாடுகளுக்கு மட்டுமே சென்றடைந்துள்ளன என்று உலக சுகாதார அமைப்பு தெரிவித்துள்ளது.

இதுகுறித்து உலக சுகாதார அமைப்பின் தலைவர் டெட்ராஸ் அதானம் கேப்ரியேசஸ் கூறும்போது, 'உலகம் முழுவதும் இதுவரை 200 கோடி தடுப்பூசிகள் விநியோகம் செய்யப்பட்டுள்ளன. இதில் 60 சதவீத தடுப்பூசிகள் அமெரிக்கா, இந்தியா மற்றும் சீனா ஆகிய மூன்று நாடுகளிடமே சென்றடைந்துள்ளன. கோவெக்ஸ் திட்டம் தடுப்பூசியை உலக நாடுகளிடையே பகிர்ந்தளிப்பதில் முக்கிய பங்கு வகிக்கின்றது.

கோவாக்ஸ் திட்டம் மூலம் சுமார் 127 நாடுகளுக்கு கொரோனா தடுப்பூசி பகிர்ந்தளிக்கப்பட்டுள்ளது. தனிநபர் வருமானம் குறைவாக உள்ள நாடுகளில் சுமார் 0.5 வீதமான தடுப்பூசிகளே சென்றடைந்துள்ளன. இன்னும் பல நாடுகளில் சுகாதாரப் பணியாளர்களுக்கும், வயதானவர்களுக்கும் கொரோனா தடுப்பூசிகள் போடப்படவில்லை. எனவே, தடுப்பூசிகள் விரைவாக விநியோகம் செய்வதை நாம் அதிகரிக்க வேண்டும்' என்றார். (ம)



# கொவிட் - 19 சீன வைரஸ்

## ட்ரம்ப் மீண்டும் ஆவேசம்

வொஷிங்டன், ஜூன் 8

கொரோனா வைரஸ் சீன ஆய்வகத்தில் இருந்து உருவாக்கப்பட்டதுதான் என்று அமெரிக்காவின் முன்னாள் அதிபரான ட்ரம்ப் மீண்டும் திட்டவட்டமாகத் தெரிவித்துள்ளார். ட்ரம்ப் அதிபராக இருக்கும்போது தான் கொரோனாத் தொற்றுப் பரவியது. அப்போதிருந்தே கொரோனாவை 'சைனீஸ் வைரஸ்' என்றுதான் ட்ரம்ப் அழைத்து வருகின்றார். இதற்கு சீனா கடும் கண்டனத்தையும் தெரிவித்திருந்தது. இந்த நிலையில் கொரோனா சீன ஆய்வகத்தில் இருந்துதான் உருவாக்கப்பட்டது என்று ட்ரம்ப் மீண்டும் வலியுறுத்தியுள்ளார்.

சீனா வைரஸ் வுகான் ஆய்வகத்தில் இருந்துதான் வெளியே கசிந்தது என்று நான் கூறியபோது கடும் எதிர்ப்பு கிளம்பியது. பலர் என்னை கடுமையாக விமர்சித்தனர். அமெரிக்காவில் கூட எனது வாதத்துக்கு எதிர்வாதங்கள் வைக்கப்பட்டன. ஆனால் நான் கூறிய குற்றச்சாட்டு உண்மை தான் என்பதை நிரூபிக்கும் ஆதாரங்கள் வந்த வண்ணம் உள்ளன.

இந்தப் பெருந்தொற்றுக்கு சீனாதான் காரணம் என்பதை தற்போது அனைவரும் உணரத் தொடங்கி விட்டனர். சீனா தனது வைரஸால் ஏற்பட்ட உயிரிழப்புகள், பலத்த சேதத்துக்கு இழப்பீடு கொடுக்க வேண்டும். இதற்காக சீனா 10 ட்ரில்லியன் டொலர்களைச் செலுத்த வேண்டும் - என்றார். (ம)

# ஹரிக்கு பெண் சிசு டயானா என்று பெயர்

வொஷிங்டன், ஜூன் 8

பிரிட்டனின் முன்னாள் இளவரசர் மெர்க்கல் தம்பதிக்கு இரண்டாவது பெண் குழந்தை பிறந்துள்ளது. அந்தக் குழந்தைக்கு டயானா என்று பெயர் சூட்டப்பட்டுள்ளது.

இங்கிலாந்து இளவரசர் சாள்ஸ் டயானா தம்பதியின் இரண்டாவது மகன் ஹரி. இவர் அமெரிக்காவைச் சேர்ந்த மேகன் என்பவரை திருமணம் செய்து கொண்டார். அரச குடும்பத்தினருடன் ஏற்பட்ட மனக்கசப்புக் காரணமாக அவர் அந்தக் குடும்பத்தில் இருந்து பிரிந்தார்.

அதன்பின் அரச குடும்பத்தின் எந்த அடையாளங்களையும் பயன்படுத்தமாட்டேன் எனக் கூறி மனைவியுடன் அமெரிக்கா சென்றுவிட்டார். ஏற்கனவே இந்த தம்பதிக்கு கடந்த 2019ஆம் ஆண்டு பெண் குழந்தை பிறந்தது. அந்த குழந்தைக்கு எலிசபெத் ராணியின் (ஆர்ச்சி ஹாரிசன் மவுன்ட்பேட்டன் வின்ட்சர்) பெயரை சூட்டியிருந்தனர். கடந்த 4ஆம் திகதி இரண்டாவதாகவும் ஒரு பெண் குழந்தை பிறந்துள்ளது. அந்தக் குழந்தைக்கு ஹரி - மெர்க்கல் தம்பதியினர் ஹரியின் தயாரான டயானாவின் பெயரைச் சூட்டியுள்ளனர். லிலிபெட் லிலி டயானா என்று அந்தக் குழந்தைக்கு பெயரிடப்பட்டுள்ளது. (ம)



# அல் ஜவாகிரி உயிருடன்!



காபுல், ஜூன் 8

அல் குவைதா அமைப்பின் தலைவர் அய்மான் அல் ஜவாகிரி உடல்நலக்குறைவு காரணமாக இறந்துவிட்டார் என்று சமீப காலங்களாக தகவல் வெளியாகியிருந்த நிலையில், அவர் உயிருடன்தான் உள்ளார் என்று ஐக்கிய நாடுகள் சபை தெரிவித்துள்ளது.

அல்கொய்தா பயங்கரவாத அமைப்பின் தலைவரான ஒசாமா பின்லேடன் கொல்லப்பட்ட பிறகு அந்த அமைப்புக்கு அய்மான் அல்ஜவாகிரி பொறுப்பேற்றார்.

10 ஆண்டுகளுக்கு முன்பு பொறுப்பேற்ற அவர் அமெரிக்காவுக்கு நேரடியாக மிரட்டல் விடுத்தார். இதையடுத்து அல்ஜவாகிரியை கொல்வோம் என்று அமெரிக்கா தெரிவித்தது. இதற்கிடையே அய்மான் அல்ஜவாகிரி உடல்நலக்குறைவு காரணமாக இறந்துவிட்டார் என்று சமீப காலங்களாக தகவல் வெளியாகின. ஆனால் அதை அல்கொய்தா அமைப்பு உறுதிப்படுத்தவில்லை. தற்போது அவர் உயிருடன் உள்ளார் என்றும் ஆப்கானிஸ்தான்-பாகிஸ்தான் எல்லையில் வசித்து வருகின்றார் என்றும் ஐ.நா. தெரிவித்துள்ளது. (ம)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 77 பிரிவுகள் விடுவிப்பு




கொழும்பு, ஜூன் 8

கொரோனாத் தொற்றால் தனிமைப்படுத்தப்பட்ட 11 மாவட்டங்களைச் சேர்ந்த 77 கிராம சேவையாளர் பிரிவுகள் தனிமைப்படுத்தலில் இருந்து விடுவிக்கப்பட்டுள்ளன என்று இராணுவத் தளபதி சவேந்திர சில்வா தெரிவித்துள்ளார். அதனடிப்படையில் இரத்தினபுரி, கம்பஹா, நுவரெலியா, திருகோணமலை, மாத்தளை, முல்லைத்தீவு, யாழ்ப்பாணம், கொழும்பு, மட்டக்களப்பு, களுத்துறை மற்றும் காலி ஆகிய மாவட்டங்களில் தனிமைப்படுத்தப் பட்டிருந்த பகுதிகள் விடுவிக்கப்பட்டுள்ளன. (எ-4)

# தடுப்பூசிகள் விவகாரத்தில் முறைமை தவறியது அரசு

## நீதிக்கான மக்கள் குரல் சுட்டிக்காட்டு



கொழும்பு, ஜூன் 8

**நாட்டுக்குத் தேவையான தடுப்பூசிகளைக் கொள்வனவு செய்யும் முறைமையில் அரசு படுதோல்வி அடைந்துள்ளது. உரிய காலத்தை தவறியமையால் இவ்வளவு நெருக்கடிகள் ஏற்பட்டுள்ளன - இவ்வாறு நீதிக்கான மக்கள் குரல் அமைப்பு சுட்டிக்காட்டியுள்ளது.**

இது தொடர்பில் அமைப்பின் உறுப்பினர் சங்கீத் வசந்த சில்வா தெரிவிக்கையில்,

நாட்டின் முறைமையை மாற்றுவோம் என்று கூறி ஆட்சிக்கு வந்த அரசால், கொரோனாத் தொற்றைத் தடுப்பதற்கான தடுப்பூசி செலுத்தலுக்கான முன்னுரிமைப் பட்டியலைத் தயாரிக்க முடியவில்லை. தடுப்பூசி செலுத்துவதற்கான முறைமையையும் ஏற்படுத்த முடியவில்லை. தாம் தயாரிக்கும் தடுப்பூசிகளுக்கு இலவச பதிவை பல நாடுகள் கடந்த வருடம் டிசெம்பர் மாதம் கோரின. அப்போது தடுப்பூசி தொடர்பில் ஆரம்ப பரிசோதனைகள் முன்னெடுக்கப்பட்டன. தடுப்பூசியின் முக்கியத்துவத்தை அறிந்துகொண்ட பல நாடுகள், தடுப்பூசி தயாரிக்கும் நிறுவனங்களுடன் கலந்துரையாடி, தமது நாடுகளுக்குத் தேவையான தடுப்பூசிகளை முற்பதிவு செய்தன. இதற்கமைய சுமார் 10 பில்லியன் தடுப்பூசிகளுக்கு பதிவுசெய்யப்பட்டன. ஆனால், எமது நாட்டுக்கு முடியாமல் போய்விட்டது.

ஜனாதிபதித் தேர்தல் பிரசாரங்களில், நாட்டைக் காப்பாற்றும் வீரர் எனும் பாடலை இயற்றி, 'வியத்மக' என்ற அமைப்பை உருவாக்கி, இந்த நாட்டில் பெரும் மாற்றத்தை ஏற்படுத்துவோம் என்று தெரிவித்தனர். சௌபாக்கியத்துக்கான எதிர்காலம் என்று பல வேடிக்கைக் கதைகளை கூறினர். ஆனால் அதிகாரத்துக்கு வந்த அரசு இன்று முழு நாட்டு மக்களையும் யாசகராக்கியுள்ளது - என்றார். (எ-4)

# தனிமைப்படுத்தலை மீறியவர் உயிரிழப்பு

## பொலிஸார் இருவர் இடைநிறுத்தம்

கொழும்பு, ஜூன் 8

கைதுசெய்யப்பட்ட நபர் ஒருவர் உயிரிழந்த சம்பவத்தை அடுத்து, உப பொலிஸ் பரிசோதகர் ஒருவரும், சார்ஜென்ட் ஒருவரும் பணியிலிருந்து இடைநிறுத்தப்பட்டுள்ளனர் என்று பொலிஸ் ஊடகப் பேச்சாளர் அஜித் ரோஹண தெரிவித்துள்ளார்.

தனிமைப்படுத்தல் சட்டத்தை மீறினார் என்ற குற்றச்சாட்டில் வடக்கு பாணந்துறை, வத்தல்பொலப் பிரதேசத்தைச் சேர்ந்த 42 வயதுடைய நபர் ஒருவர் பொலிஸாரால் நேற்றுமுன்தினம் கைதுசெய்யப்பட்டிருந்தார்.

குறித்த நபர் பொலிஸ் நிலையத்துக்கு அழைத்துச் செல்லும் வழியில், பொலிஸ் வாகனத்தில் இருந்து பாய்ந்து தப்பிக்க முயற்சித்துள்ளார்.

இதன்போது படுகாயமடைந்த நபர் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டிருந்த நிலையில் உயிரிழந்துள்ளார்.

இதனையடுத்து வடக்கு பாணந்துறை பொலிஸின் உப பொலிஸ் பரிசோதகர் ஒருவரும், சார்ஜென்ட் ஒருவரும் பணியிலிருந்து இடைநிறுத்தப்பட்டுள்ளனர் என்றும் அவர் தெரிவித்துள்ளார். (எ-4)




# சிறுவர்களுக்கு நோயெதிர்ப்பு சத்துள்ள உணவுகள் தேவை

## விசேட மருத்துவர் பரிந்துரை

கொழும்பு, ஜூன் 8

கொரோனாத் தொற்றிலிருந்து சிறுவர்களைப் பாதுகாக்கவும், நோயெதிர்ப்பு சக்தியை அதிகரிக்கவும், மஞ்சள் நிறத்திலான காய்கறிகள் மற்றும் மூலிகைகள் கொண்ட அரிசி உள்ளிட்ட சத்துள்ள உணவுகளை அவர்களுக்கு வழங்குங்கள் இவ்வாறு சிறுவர் நோய் தொடர்பான விசேட மருத்துவ நிபுணர் [illegible] பரிந்துரைத்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

தொத்திறைச்சி (சோசேஜஸ்) போன்ற செயற்கை உணவுகளுக்குப் பதிலாக விற்றமின் அடங்கிய இயற்கையான உணவுகளை சிறுவர்களுக்கு வழங்க வேண்டும்.

வட்டக்காய் போன்ற மஞ்சள் நிறத்திலான மரக்கறிகள், முருங்கைக் கீரை, வல்லாரை உள்ளிட்ட மூலிகைகள் ஆகியவற்றுடன் முட்டையையும் ஒரு நேரம் சாப்பாட்டுடன் சேர்க்க வேண்டும். இதனூடாக சிறுவர்களுக்கு நோயெதிர்ப்பு கட்டமைப்பு மேம்படும். சூரிய ஒளியில்லாத அறைகளில் அல்லது குளிரூட்டப்பட்ட அறைகளில் சிறுவர்களை வைத்திருந்தால் அவர்களின் உடல் மற்றும் மன ஆரோக்கியம் மோசமடையும்.

எனவே சூரியஒளி கிடைக்கும் சந்தர்ப்பங்களில், சூரிய ஒளியில் அவர்களை வைத்திருப்பது நல்லது - என்றார். (எ-4)

# கர்ப்பிணிகளுக்கு நாளை தடுப்பூசி!

கொழும்பு, ஜூன் 8

கர்ப்பிணிகளுக்கு நாளை புதன்கிழமை முதல் கொரோனாத் தடுப்பூசிகள் செலுத்தும் பணிகள் ஆரம்பிக்கப்படும் என்று மகப்பேறியல் மற்றும் மகப்பேறு மருத்துவ சங்கத் தலைவர் மருத்துவர் பிரதீப் டி சில்வா தெரிவித்துள்ளார்.

நாடு முழுவதிலும் தற்போது இரண்டு லட்சத்து 75 ஆயிரம் கர்ப்பிணிகள் பதிவுசெய்யப்பட்டுள்ளனர். இவர்களுக்கு சிறப்பு அளவுகோல்களின் கீழ் கொரோனாத் தடுப்பூசிகளைச் செலுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்றும் அவர் தெரிவித்துள்ளார். அதேவேளை கர்ப்பிணிகளுக்கு ஒரு மாதத்துக்குள் தடுப்பூசி செலுத்தும் நடவடிக்கையை நிறைவுக்குக் கொண்டுவருவதற்குத் திட்டமிடப்பட்டுள்ளது என்று பிரதி சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் விசேட மருத்துவர் ஹேமந்த ஹேரத் தெரிவித்துள்ளார்.

கர்ப்பிணிகளுக்குத் தடுப்பூசி செலுத்துவது தொடர்பில் வழிகாட்டல்கள் வெளியிடப்பட்டுள்ளன. இதில் முக்கியமாக இரு விடயங்கள் கருத்தில் கொள்ளப்பட வேண்டும். கர்ப்பம் தரித்து மூன்று மாதங்களுக்கு மேற்பட்ட கர்ப்பிணிகளே தடுப்பூசி பெற்றுக்கொள்ள வேண்டும். மூன்று மாதங்களுக்கு குறைவான கர்ப்பிணிகளுக்கு தடுப்பூசி செலுத்தப்படாது. அத்துடன் தடுப்பூசி பெறுவதற்கு கர்ப்பிணிகள், மகப்பேற்று மற்றும் நரம்பியல் விசேட மருத்துவர் ஒருவரின் பரிந்துரையைப் பெற்றுக்கொள்ள வேண்டும் என்றும் அவர் தெரிவித்துள்ளார். (ம-எ4,44)

# யானை தாக்கி உயிரிழந்தவருக்கு கொரோனா

கொழும்பு, ஜூன் 8

காட்டு யானை தாக்கி உயிரிழந்த இரண்டு பிள்ளைகளின் தந்தைக்கு, கொரோனாத் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.

ஹம்பாந்தோட்டை கெடென்வெளப் பிரதேசத்தைச் சேர்ந்த 35 வயதுடைய நபர் காட்டு யானை தாக்கி நேற்றுமுன்தினம் உயிரிழந்தார். அவருக்கு மேற்கொள்ளப்பட்ட பி.சி.ஆர். பரிசோதனையில், கொரோனாத் தொற்று உறுதிசெய்யப்பட்டுள்ளது.

இதனையடுத்து உயிரிழந்தவருக்கான இறப்பு பரிசோதனைகளை முன்னெடுத்த அதிகாரி, பொலிஸ் அதிகாரி, பொதுச் சுகாதாரப் பரிசோதகர்கள் உள்ளிட்ட உயிரிழந்தவரின் பிரதேசத்தைச் சேர்ந்த அனைவரும் தனிமைப்படுத்தப்பட்டுள்ளனர். (எ-4)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





# யாழ்ப்பாண பொது நூலகம்

# எரிக்கப்பட்டது எப்போது?

## வடமாகாண சபையின் அவைத்தலைவர் விளக்கம்

யாழ்ப்பாணப் பொதுநூலக எரிப்புத் தொடர்பாக உண்மைத் தகவல்கள் திரிபுபடுத்தப்படுவது கவலையளிப்பதும் எரிச்சலூட்டுவதுமாக உள்ளது. நூலகம் எரிக்கப்பட்ட நாளை ஒரு விவாதப் பொருளாக்கி பட்டிமன்றம் நடாத்தும் நிலைக்கு ஒரு சிலர் உள்ளாக்கியுள்ளனர் இவ்வாறு தெரிவித்துள்ளார் யாழ்ப்பாணம் மாநகர முன்னாள் ஆணையாளரும் வடக்கு மாகாண சபையின் அவைத்தலைவருமான சீ.வீ.கே.சிவஞானம்.

நூலக எரிப்புத் தொடர்பில் பல்வேறு கருத்துக்கள் முன்பின் முரணாக முன்வைக்கப்பட்டுவரும் நிலையில், தெளிவூட்டலை வழங்கும் வகையில் அவர் ஓர் ஊடக அறிக்கையை அனுப்பிவைத்துள்ளார்.

அந்த அறிக்கையில் மேலும் உள்ளதாவது:

நூலகம் எரிக்கப்பட்ட நாளை ஒரு விவாதப் பொருளாக்கி பட்டிமன்றம் நடத்தும் நிலைக்கு ஒரு சிலர் உள்ளாக்கியுள்ளனர். யாழ்ப்பாண பொது நூலகம் பற்றி எழுதும் அநேகமானோர் அது எரிக்கப்பட்டது 1981 ஜூன் முதலாம் திகதி இராப்பொழுது என்று எழுதும்போது, ஒரு சிலர் இல்லை 1981 மே மாதம் 31ஆம் திகதி என எழுதி இளைய சந்ததியினரிடையே குழப்பத்தை உண்டாக்க முயல்கின்றனர். சூட்டுச் சம்பவம் நடைபெற்ற நாச்சிமார் கோவிலடி கூட்டம் ஐக்கிய தேசியக் கட்சியின் கூட்டம் என்றும், சூட்டுச் சம்பவத்துக்கு முன்னரே நூலகம் எரிக்கப்பட்டு விட்டது எனவும், மாவட்ட சபைத் தேர்தல் 1981 மே 31ஆம் திகதி நடைபெற்றதென்றும் பல குளறுபடியான, பொய்யான பதிவுகள் மேற்கொள்ளப்படுகின்றன.

எனவே இவை பற்றிய தெளிவுபடுத்தல்கள் பல ஊடகங்களுக்கு எம்மால் இம்முறை வழங்கப்பட்டுள்ளன. நாச்சிமார் கோவிலடியில் நடைபெற்றது தமிழர் விடுதலைக் கூட்டணியின் கூட்டம் என்பதும் யாழ்ப்பாணம் பொது நூலகம் 1981 ஜூன் மாதம் முதலாம் திகதி இரவோடு இரவாக எரிக்கப்பட்டதும், யாழ்ப்பாண மாவட்ட சபைத் தேர்தல் 1981 ஜூன் நான்காம் திகதி நடைபெற்றதும் உறுதிப்படுத்தப்படுகின்றது. இதுவரை கூறப்பட்ட விடயங்களுக்கு மேலதிகமாக இரண்டு விடயங்களை எம்முடன் சம காலத்தில் மாநகர சபையில் சேவையாற்றிய தீவிர தமிழ்த் தேசிய உணர்வாளரும், தமிழரசுக்கட்சியின் வளர்ச்சியில் பெரும் பங்காற்றியவருமான உரும்பிராய் சா.ஆ.தருமரத்தினம் எழுதிய கட்டுரையின் சில பகுதிகள் அப்படியே இங்கு தரப்படுகின்றன.

### நூலக எரிப்பு ஏன் பூதாகரமாகவில்லை?

'1981 யாழ்ப்பாணம் அபிவிருத்தி சபைத் தேர்தல் அசம்பாவிதங்களின்போது தேர்தல் கடமை புரிவதற்காக அனுப்பப்பட்டிருந்த விசேட காவல்துறையினர் யாழ். விளையாட்டரங்கிலும், யாழ். மத்திய கல்லூரியிலும் தங்கவைக்கப்பட்டிருந்தனர். மே 31ஆம் திகதி சம்பவித்திருந்த வன்செயல்களைத் தொடர்ந்து ஊடரங்குச் சட்டம் பிறப்பிக்கப்பட்டிருந்தது. அத்தகைய ஒரு சூழ்நிலையில் யாழ். பொது நூலகம் அதனது 98 ஆயிரம் தேடற்கரிய கையெழுத்துப் பிரதிகளுடனும் 1981 ஜூன் முதலாம் நாள் நள்ளிரவினில் தீயால் பொசுக்கப்பட்டது.' 'அப்பொழுது யாழ்ப்பாணத்தில் வெளியிடப்பட்டு வந்த ஒரே நாளேடான 'ஈழநாடு' பத்திரிகையும் சமகாலத்தில் அதே இரவில் எரிக்கப்பட்டிருந்தமையால் தலைநகர் கொழும்பில் இருந்த அச்சு மற்றும் இலத்திரனியல் ஊடகங்கள் ஒன்றுதானும் யாழ். பொது நூலகம் தீக்கு இரையாக்கப்பட்ட செய்தியை பிரசுரிக்காது இருந்தமையால் யாழ். நகருக்கு வெளியே யாழ்ப்பாண மாவட்டத்திலும்கூட வெறும் வதந்தியாக அது பரவியிருந்ததே தவிர செய்தியாக பிரஸ்தாபிக்கப்பட்டு இருக்கவில்லை.'

### எவ்வாறு விடயம் வெளியில் வந்தது?

'தீவின் எந்தவோர் ஊடகம்தானும் யாழ்.பொது நூலகம் தகனம் செய்யப்பட்டமையைச் செய்தியாக வெளியிடாதிருந்தமை கட்டுரையாளரைப் பெரிதும் வருத்திற்று. ஆகவே, மனித உரிமை நலன்களின்மீது பெரும் அர்ப்பணிப்புடன் ஈடுபாடுகொண்டவராகப் பணியாற்றி வந்த பண்டத்தரிப்பு சட்டத்தரணி பி.எவ்.சேவியரிடம் கட்டுரையாளர் அது விடயத்தை சுட்டியபோது, இன்று மாலை 5 மணிக்கு முன்பாக யாழ். பொதுநூலகத்தின் எரிந்து போன பாகங்களைக் காண்பிக்கும் ஒளிப்படப் பிரதிகளை என்னிடம் தருவாய் ஆயின் அவற்றுக்கான செலவினை யானே உனக்குத் தருவேன் என்றும், யாழ். பொது நூலகம் தகனம் செய்யப்பட்டதை உலகச் செய்தியாக மாற்றித் தருகிறேனா இல்லையா பார் என எனக்குச் சவால் விட்டார்.

'கடற்படையினரது பிரசன்னத்தை சாதகமாகப் பயன்படுத்தி யாழ்.பொது நூலகத்தின் எரிந்து கொண்டிருந்த தோற்றத்தை காண்பிக்கும் ஒளிப்படங்களை தமது உத்தியோகத் தேவையின் பொருட்டாக எடுப்பித்திருந்தார் மாநகர ஆணையாளர் சீ.வீ.கே.சிவஞானம்.'

'அப்போது நிலவிய சூழ்நிலையில் யாரும் ஒளிப்படம் எடுப்பதற்கு யாழ்.பொதுநூலகத்தை அண்மித்தல் அசாத்தியம் என்பதைப் புரிந்துகொண்ட கட்டுரையாளர் மாநகர ஆணையாளர் சீ.வீ.கே.சிவஞானத்தை அணுகி சட்டத்தரணி சேவியர் கட்டுரையாளருக்கு விடுத்திருந்த சவாலை எடுத்துரைத்திருந்தார். உடனடியாகவே தொலைபேசி மூலம் தமக்கு எரிந்துபோன நூலகத்தின் பல்வேறு தோற்றங்களையும் ஒளிப்படப் பிரதிகளை எடுத்துத்தந்தவரிடம் அவற்றின் ஒளிப் பிரதியை தமக்கும் தரும்படி அவரை பணித்து விட்டு தமது பாதுகாப்பில் வைத்திருந்த மேற்படி ஒளிப்படங்கள் உள்ளடக்கும் இரு புத்தகங்களையும் கட்டுரையாளரிடம் தந்தார். அவற்றில் இருந்து பெறப்பட்ட ஒளிப்பட பிரதிகள் சட்டத்தரணி சேவியர் மூலம் அன்று மாலையே தலைநகர் கொழும்புக்கு எடுத்துச் செல்லப்பட்டு மறுநாள் விமானத்தில் பயணித்த ஓர் இளம் சட்டத்தரணியிடம் சுங்கப் பரிசோதனைப் பீடத்தை அப்பயணி கடந்து சென்றதும் ஒப்படைக்கப்பட்டன. சென்னையில் மேற்படி ஒளிப்படங்களைப் பெற்றுக்கொண்ட மறவன்புல சச்சி (மறவன்புலோ சச்சிதானந்தன்) அவற்றிலிருந்து மேலும் பல பிரதிகளை அங்கு பெற்றுக் கொண்டதன் பின் தம்மால் கூட்டப்பட்டிருந்த சர்வதேச ஊடகவியலாளர் மாநாட்டில் ஒளிப்படங்களை ஆதாரமாகச் சமர்ப்பித்து தகவல் வெளியிட்டிருந்தார். மறுவிநாடியே தென்கிழக்கு ஆசியாவின் மிகவும் பெரிதான திராவிட சிற்பவியல் பாணியில் நிர்மாணிக்கப்பட்டி ருந்த யாழ். பொதுநூலகம் அதன் புத்தக சேர்வுகள் 98 ஆயிரம் தேடற்கரிய கையெழுத்து பிரதிகள் தீக்கிரையாக்கப்பட்டமை உலகச் செய்தியாக மாறிவிட்டது. மேற்படி தகவல் செய்தியாக வெளியிடப்பட்டிராத அச்சு, வானொலி, ஒளிபரப்பு ஊடகங்களே கிடையாது. சர்வதேச சஞ்சிகைகள் யாவும் அதனை முதன்மைச் செய்தியாக பிரஸ்தாபித்திருந்தனர். மாநகர ஆணையாளர் சீ.வீ.கே.சிவஞானத்திடமிருந்து பெறப்பட்ட ஒளிப்படப் பிரதிகள் மூலமே அச்சாதனை நிலை நாட்டப்பட்டிருந்தது.'



### இழப்பீடு வழங்கல்

'யாழ்.பொது நூலகத்துக்குத் தனிநபர் ஆணைக்குழு (லயனல் பெர்னாண்டோ ஆணைக்குழு) பரிந்துரைத்திருந்த இழப்பீட்டுத் தொகை ஒரு கோடி 20 லட்சம் ரூபா. ஆனால் அந்தத் தொகை அப்படியே அரசாங்கப் பணத்தில் இருந்து வழங்கப்பட்டிருக்கவில்லை. யாழ். பொதுநூலகத்துக்கு அரசின் பணத்திலிருந்து நட்டஈடு தரப்படுவது யாழ். பொது நூலகத்தைத் தகனம்செய்த குற்றப் பொறுப்பை ஏற்றுக் கொள்வதாக இருக்கும் என்பதால் போலும் அவற்றுக்கு மாறாக குடியரசு தலைவர் நம்பிக்கையை நிதியிலிருந்து 10 இலட்சம் ரூபா தொகையை விடுவித்து வங்கியில் குடியரசுத் தலைவரின் பெயரில் யாழ். பொதுநூலகப் புனரமைப்பு நிதி எனும் ஒரு புதிய கணக்கைத் திறந்து அதிலிருந்து பெறப்பட்ட 9 லட்சம் ரூபாவுக்கான காசோலையை குடியரசுத் தலைவரின் நிவாரண நிதியாக அனுப்பியிருந்தார். ஆயின் மாநகர ஆணையாளர் சீ.வீ.கே.சிவஞானம் பெறப்பட்ட அத்தொகைக்கான பற்றுச்சீட்டில் 'வழங்கப்பட வேண்டிய இழப்பீட்டின் ஒரு பாகமாகவே ஏற்றுக் கொண்டிருந்தார். பற்றுச்சீட்டில் அவ்வாறாக குறிப்பிட்டிருந்தார்.' என்று சா.ஆ.தருமரத்தினம் 2013இல் வெளியிட்ட தமது கட்டுரையில் குறிப்பிட்டிருந்தார். இவர் இப்பொழுது கொழும்பில் வசிக்கின்றமை குறிப்பிடத்தக்கது - என்றுள்ளது.

யாழ்ப்பாணம் மாநகர முன்னாள் ஆணையாளரும் வடக்கு மாகாண சபையின் அவைத்தலைவருமான சீ.வீ.கே.சிவஞானம் 1960ஆம் ஆண்டு 1989ஆம் ஆண்டு வரைக்குமான காலப்பகுதியில் சுமார் 25 ஆண்டுகள் யாழ்ப்பாணம் மாநகர சபையில் பணியாற்றியவராவார். குறிப்பாக இவர் 1975 முதல் 1988 இறுதிவரை ஆணையாளராகவும், விசேட ஆணையாளராகவும் சேவையாற்றியவராவார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இன்றைய நாள்

**மேடம்:** அதிர்ஷ்டத்தை விடவும் உழைப்பு உங்களுக்கு அதிகம் உதவும். ஆன்மிக சிந்தனை அமைதி தரும். புதிய வருமானம் ஒன்று வரும். பேச்சில் மிகவும் கவனமாக இருங்கள்.

**இடபம்:** அலுவலக விஷயங்களில் இன்று வெற்றி காண்பீர்கள். நீண்ட நாள்களாக இருந்த சருமப் பிரச்னைகள் முடிவுக்கு வரும். வாழ்க்கைத்துணையிடம் இருந்த பிரச்னைகள் தீரும்.

**மிதுனம்:** செலவுகளைக் கட்டுப்படுத்துவீர்கள். பூச்சிக்கடி ஏற்படலாம். நிறையப் பேசிக் கவர்வீர்கள். முதலீடுகள் செய்வீர்கள். முகராசியால் வெல்வீர்கள். ரகசியங்களைக் காக்க வேண்டும்.

**கடகம்:** கவனமான செயற்பாடு காரணமாக வெற்றி பெறுவீர்கள். எதிலும் தடை, தாமதம் இருந்தாலும் இறுதி வெற்றி உங்களுக்கே. பணிச்சுமையை மிகுந்த திறமையுடன் சமாளிப்பீர்கள்.

**சிம்மம்:** உயிர் நண்பர்களுக்கு உங்கள் உழைப்பால் நன்மை செய்வீர்கள். புதிய உத்வேகம் உருவாகி செயற்பாடுகளில் முன்னேறுவீர்கள். வாழ்க்கைத்துணைக்கு பதவி, சம்பளம் உயரும்.

**கன்னி:** தனிப்பட்ட சாமர்த்தியம் காரணமாக வெற்றியை எட்டுவீர்கள். பேச்சைக் குறைத்து திறமையை அதிகரித்து வெற்றி அடைவீர்கள். இன்று நன்மை கூடுதலாகக் கிடைக்கும்..

**துலாம்:** தாயாருக்காக செய்யும் முயற்சிகளில் தாமதம் ஏற்படும். பிள்ளைகளுக்கு இருந்த பிரச் சினைகள் தீர்ந்து நிம்மதி வரும். நீண்ட இடைவெளிக்குப் பிறகு உறவினர் ஒருவர் நன்மை செய்வார்.

**விருச்சிகம்:** சுமை தீர்ந்து நிம்மதிப் பெருமூச்சு வரும். இன உணர்வு வரும். தாயாருக்கு உங்களால் நன்மை உண்டு. வாகனம் வாங்குவீர்கள். நுட்பமான யோசனையால் உயர்வுக்கு வழி கிடைக்கும்.

**தனுசு:** தவறான வார்த்தைகளைப் பயன்படுத்தி பிரச்னையில் சிக்க வேண்டாம். தளர்ச்சி நீங்கி வளர்ச்சி கூடும். குடும்பத்தில் முன்னேற்றம் உண்டு. சிறிய பிரச்சினைகள் இருக்கும்.

**மகரம்:** சிரமங்களுக்கு இடையே சிறிய நம்பிக்கை பிறக்கும். தவறுகளைத் திருத்திக் கொள்வதன் மூலம் முன்னேறுவீர்கள். மெல்ல உழைத்து மெதுவாகத்தான் முன்னேறமுடியும்.

**கும்பம்:** பிள்ளைகளுக்கு உங்களின் உதவியும் ஆதரவும் உண்டு. பணிவுடன் வெல்வீர்கள். சோம்பலைத் தவிர்ப்பது அவசியம். அரசியல் ஈடுபாடு அதிகரிக்கும். கடன் கிடைக்கும்.

**மீனம்:** வரவும், செலவும் உண்டு. முன்னேற்றம் நிதானமாக இருக்கும். மற்றவர்களுக்கு மனக்காயங்களை ஏற்படுத்த வேண்டாம். தன்னம்பிக்கையுடன் இருக்க முயலுங்கள்.



# நித்தி 'கம் பேக்'

### கலாய்க்கும் நெட்டிசன்கள்

நான் இந்தியாவில் கால் வைத்தால்தான் கொரோனாத் தொற்று ஒழியும் என நித்தியானந்தா புதிதாக ஒரு கருத்தை சொல்லி சர்ச்சையில் சிக்கியுள்ளார்.

அண்மையில் ஏழுமலையான் போல் வேடமணிந்து புகைப்படத்தை வெளியிட்டிருந்தார். தற்போது குறி சொல்லும் அம்மன் வேடத்தை அணிந்துள்ளார். அடர்ந்த புருவத்துடன் கண்களில் கலர் லென்ஸுடன் தோன்றிய நித்தி தன் உடலில் அம்மன் புகுந்துள்ளது. இந்தியாவில் காலடி எடுத்து வைத்தால்தான் கொரோனா இந்தியாவை விட்டு ஓடும் என்று கூறியுள்ளார். இந்த காணொலி வெளியான நிலையில் நெட்டிசன்கள் "கம்பேக்" என கலாய்த்து வருகிறார்கள்.

# நம்பிக்கை வரிகள்

- ஒற்றைக்காலில் நின்று தவம் செய்தாலும் மீன் கிடைக்கும் வரையில் முயற்சியை கைவிடாத வெண்கொக்கு!
- ஆயிரக்கணக்கில் அடி வாங்கினாலும் சிலையாகும் வரையில் உளியை உறவாக எண்ணும் கருங்கல்!
- கால்களில்லாத போதிலும் பாறைகளில் மோதியும் படுகுழியில் விழுந்து கடலைச் சேரும் குறிக்கோள்களை கடத்திவிடாத நதி!
- கைகளை துண்டித்தாலும் தலையைத் தறித்தாலும் நிழல் பரப்பும் எண்ணத்தில் மீண்டும் தழைக்கின்ற மரம்!
- இரும்பு முள்ளில் குத்தினாலும் ரணத்தையும் கூட ரசித்துக்கொண்டே வண்டியிழுக்கும் எருதுகள்!
- கனவு நிறைவேறும்வரை கலைத்து விடாதே முயற்சியை. ஏனெனில்.. முயற்சி மட்டுமே முன்னேற்ற மாளிகைக்கு முதலிடமாகும்!




## twitter

twitter.com/@Rahmath_Krish

மகிழ்ச்சி காலங்கள் கற்றுத்தருவதை விட, கண்ணீர் காலங்கள் கற்றுத்தருபவை.. அதி அவசிய பாடங்கள்..

twitter.com/@mugamoodi11

இல்லாதவனுக்கு எது கிடைத்தாலும் அதிசயம்..!!
இருப்பவனுக்கு எது கிடைத்தாலும் அலட்சியம்..!!

**சிகிச்சை அளித்த #மருத்துவரையே கரம் பிடித்த #கொரானா நோயாளி**







# சிக்கலில் சமந்தா!

## வெடிக்கும் கண்டனங்கள்

சமந்தா நடிப்பில் அமேசான் பிரைமில் வெளியாகி உள்ள 'தி ஃபேமிலி மேன் 2' வெப் தொடர் ஈழத் தமிழர்களை கொச்சைப்படுத்தி உள்ளனர் என #FamilyMan2_Against_Tamils என்ற ஹாஷ்டேக்கில் கண்டனங்கள் குவிந்து வருகின்றன.

இந்த வெப் தொடரில் ஈழப் போராளியாக நடித்துள்ள நடிகை சமந்தா ஆபாசக் காட்சிகளில் நடித்துள்ளார் என்றும் ஈழப் போராளி பெண்களை கொச்சைப்படுத்தும் விதமாக அவரது கதாபாத்திரம் சித்தரிக்கப்பட்டுள்ளது எனவும் சமூக வலைத்தளங்களில் அவருக்கு எதிரான கண்டனங்கள் எழுந்துள்ளன.

அத்துடன் இலங்கை தமிழர்களின் தியாக போராட்டத்தை இப்படி எள்ளி நகையாடியுள்ள அமேசான் பிரைமை நிரந்தரமாகத் தடைசெய்ய வேண்டும் என்று வலுவான கண்டனங்கள் குவிந்து வருகின்றன.

"ஒடுக்கப்பட்ட, அடிப்படை உரிமைகள் மறுக்கப்பட்ட தன் இனத்துக்கான உரிமையை மீட்க ஒழுக்கத்தோடு ஒரு தமிழ்த் தேசிய அரசாங்கத்தை, ஆறுபடை கொண்ட ராணுவத்தை கட்டமைத்தவர்கள் எங்கள் போராளிகள். அதன் வரலாற்றை சிதைப்பதை ஒருபோதும் ஏற்க முடியாது" என தி ஃபேமிலிமேன் 2 வெப் தொடரை இயக்கிய இயக்குநர்களுக்கும் அதில் நடித்த நடிகர்களுக்கும் அதை ஒளிபரப்பும் அமேசான் பிரைமுக்கும் கண்டனங்களை குவித்துள்ளனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தடுப்பூசி முன்னுரிமைப் பட்டியல் மீள ஒழுங்கமைக்கப்படவேண்டும்

## மருத்துவ அதிகாரிகள் சங்கம் தெரிவிப்பு

**கொழும்பு, ஜூன் 8**
**சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகத்தால் கடந்த 5ஆம் திகதி வெளியிடப்பட்ட தடுப்பூசி ஏற்றுவதற்கான முன்னுரிமைப் பட்டியல் மீள ஒழுங்கமைக்கப்பட வேண்டும் என்று அரச மருத்துவ அதிகாரிகள் சங்கம் தெரிவித்துள்ளது.**

கொழும்பில் நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கருத்துத் தெரிவித்த அந்தச் சங்கத்தின் மத்திய குழு உறுப்பினர் மருத்துவர் வாசன் ரட்ணசிங்கம் தெரிவிக்கையில்;

சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகத்தால் கடந்த 5ஆம் திகதி தடுப்பூசி ஏற்றுவதற்கான முன்னுரிமைப் பட்டியல் வெளியிடப்பட்டது. அதில் எல்லோருக்கும் சமனான முன்னுரிமை வழங்கப்பட்டுள்ளதாகவே காண்கின்றோம். முன்னுரிமைப் பட்டியலில் இது ஒழுங்கமைப்பை காட்டவில்லை. 30 தொடக்கம் 60 வயது வரையான பொதுமக்கள் அனைவருக்கும் தடுப்பூசிகள் ஏற்றுவதையும் இந்தச் சுற்றறிக்கை முன்னுரிமைப் படுத்தியுள்ளது. இது தடுப்பூசி வழங்கல் செயற்பாடுகளில் பல்வேறு குறைபாடுகளை ஏற்படுத்திக்கொள்ளும். அதேபோல் பல்வேறு தலையீடுகளை ஏற்படுத்தவும், செல்வாக்குச் செலுத்தவும் வழி ஏற்படுத்தும் வகையில் அமைந்துள்ளது.

குறைபாடுகள் சரி செய்யப்படவேண்டும். தொற்று நோயியல் பிரிவு சரிவரச் செயற்படவில்லை என்பதையே இது எடுத்துக்காட்டுகின்றது. முன்னுரிமைப்பட்டியல் மீள மறுசீரமைக்கப்பட வேண்டும் - என்றார். (ஒ,5)




# சுகாதாரக் கட்டுப்பாடுகளுடன் வங்கிகளை மீளத் திறக்கவும்

## மத்திய வங்கி அறிவுறுத்து

கொழும்பு, ஜூன் 8
எதிர்வரும் நாள்களில் வர்த்தக மற்றும் விசேட வங்கி செயற்பாடுகளை முன்னெடுப்பதற்கு நடவடிக்கை எடுக்குமாறு மத்திய வங்கி அறிவுறுத்தல் விடுத்துள்ளது.

இந்த வாரத்தில் வர்த்தக மற்றும் விசேட வங்கிகள் சாதாரண செயற்பாடுகளுக்காக இயங்காது என அறிவிக்கப்பட்டிருந்த நிலையில், மத்திய வங்கி இதனை அறிவித்துள்ளது.

சுகாதார நடைமுறைகளைப் பின்பற்றி உரிய செயற்பாடுகளை முன்னெடுக்குமாறு மத்திய வங்கி ஆளுநரின் கையொப்பத்துடன் வெளியிடப்பட்டுள்ள சுற்றறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதில், வங்கிச் செயற்பாடுகளை 15 பேர் கொண்ட ஊழியர்களுடன் முன்னெடுக்க வேண்டும். சம்பளம் வழங்குதல், தன்னியக்க வங்கி சேவைகளை வழங்குதல் உள்ளிட்ட செயற்பாடுகளை தடையின்றி முன்னெடுத்தல் வேண்டும். பயணக் கட்டுப்பாடு நடைமுறைப்படுத்தப்பட்டுள்ள காலப்பகுதிக்குள் வங்கி செயற்பாடுகளை முன்னெடுத்துசெல்ல அனுமதி வழங்குமாறு பொலிஸ் மா அதிபரிடம் மத்திய வங்கி ஆளுநர் விடுத்திருந்த கோரிக்கைக்கு அமைய, சுகாதார அமைச்சால் உரிய வழிகாட்டல்கள் வழங்கப்பட்டுள்ளன.

அத்துடன், வங்கி ஊழியர்களுக்கான பயண ஏற்பாடுகளை அருகில் உள்ள பொலிஸ் நிலையத்துக்கு அறிவிப்பதன் மூலம் முன்னெடுக்குமாறும் குறிப்பிடப்பட்டுள்ளது. (த-இ)

# நேற்று தொற்று 2,610

கொழும்பு, ஜூன் 8
இலங்கையில் நேற்றும் 2 ஆயிரத்து 610 பேர் கொரோனாத் தொற்றுடன் அடையாளம் காணப்பட்டுள்ளனர் என்று அரச தகவல் திணைக்களம் அறிவித்துள்ளது.

இதையடுத்து நாட்டில் கொரோனாத் தொற்றுடன் அடையாளம் காணப்பட்டவர்களின் மொத்த எண்ணிக்கை 2 லட்சத்து 7 ஆயிரத்து 943 ஆக எகிறியுள்ளது. மருத்துவமனைகள் மற்றும் தனிமைப்படுத்தல் மையங்கள் என்பவற்றில் சிகிச்சை பெறுபவர்களின் எண்ணிக்கை 30 ஆயிரத்து 156 ஆக அதிகரித்துள்ளது.

இதேவேளை, கொரோனாவிலிருந்து குணமடைந்த வர்களின் மொத்த எண்ணிக்கை ஒரு லட்சத்து 76 ஆயிரத்து 45 ஆக உயர்வடைந்துள்ளது. (த-22)

# கடல் மீன்களை உட்கொள்வதில் எந்தவிதமான பாதிப்பும் இல்லை

## இராஜாங்க அமைச்சர் காஞ்சன தெரிவிப்பு

கொழும்பு, ஜூன் 8
கடல் மீன்களை உட்கொள்வதில் எந்தப் பாதிப்பும் இல்லை என்று தேசிய நீரியல் வள ஆய்வு நிறுவனம் (நாரா) தெரிவித்துள்ளது என மீன்பிடி இராஜாங்க அமைச்சர் காஞ்சன விஜேசேகர தெரிவித்தார்.

கொழும்புத் துறைமுக கடற்பரப்பில் தீ விபத்துக்குள்ளான 'எக்ஸ்பிரஸ் பேர்ள்' கப்பலில் இருந்து வெளியான இரசாயனம் மற்றும் பிற பொருள்கள் கடலில் கலந்துள்ளன. இதனால் கடலில் பிடிக்கப்படும் மீன்கள் உண்பதற்கு உகந்தவையல்ல என பல்வேறு கருத்துக்கள் வெளியிடப்பட்டுவரும் நிலையிலேயே அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

இருப்பினும், இது குறித்து ஆய்வுகளை மேற்கொண்டுள்ள தேசிய நீரியல் வள ஆய்வு நிறுவனத்தின் ஆரம்ப அறிக்கைகளின்படி, கடல் மீன்களை உண்பதில் எந்தப் பிரச்சினையும் இல்லை என்று இராஜாங்க அமைச்சர் காஞ்சன விஜேசேகர கூறினார். (த-22)



# சடலத்தை முத்தமிட்டவருக்கு கொரோனாத் தொற்று உறுதி

கொழும்பு, ஜூன் 8
திருகோணமலை பொது மருத்துவமனையில் உயிரிழந்த பெண்ணுக்கு அன்டிஜென் பரிசோதனை மூலம் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது. இந்தநிலையில், அந்தப் பெண்ணின் சடலத்தை முத்தமிட்ட ஒரே குடும்பத்தைச் சேர்ந்த மூவருக்கு மேற்கொள்ளப்பட்ட அன்டிஜென் பரிசோதனையின் மூலம் உயிரிழந்த பெண்ணின் மகளுக்குத் தொற்று உறுதிசெய்யப்பட்டுள்ளது என்று திருகோணமலை பொது மருத்துவமனை மருத்துவ அதிகாரி தெரிவித்தார்.

இவ்வாறு உயிரிழந்த பெண் திருகோணமலைரொட்டவெவமிரிஸ்வெவ பகுதியைச் சேர்ந்த 50 வயது உடையவர் எனத் தெரியவருகின்றது. அத்துடன் உயிரிழந்த பெண்ணுடன் நெருங்கிய தொடர்புகளைப் பேணிவந்த 19 பேருக்கு நேற்று மாலை மேற்கொள்ளப்பட்ட அன்டிஜென் பரிசோதனையின் மூலம் மூவருக்குத் தொற்று உறுதிசெய்யப்பட்டுள்ளது என்று கோமரங்கடவல பிரதேசத்துக்குப் பொறுப்பான பொதுச் சுகாதாரப் பரிசோதகர் தெரிவித்தார். தொற்றுக்கு உள்ளான மூவரில் ஒன்றரை வயது சிறுவனொருவர் அடங்குகின்றார். அத்துடன் தொற்றுக்கு உள்ளானவர்களுடன் தொடர்புகளைப் பேணிவந்தவர்களை தனிமைப்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்றும் அவர் மேலும் தெரிவித்தார். (த-இ)

# பயணத் தடையால் ஒருவர் தவறான முடிவு

யாழ்ப்பாணம், ஜூன் 8
கோவில்கள், ஊர்கள் மற்றும் வெளிமாவட்டங்கள் என தினமும் மோட்டார் சைக்கிளில் பயணிக்கும் ஒருவர் பயணத்தடையால் வீட்டுக்குள் முடங்கிக் கிடந்தமையால் ஏற்பட்ட மன விரக்தியில் தவறான முடிவெடுத்து தனது உயிரைத் துறந்துள்ளார் என்று விசாரணையில் தெரிவிக்கப்பட்டது.

சம்பவத்தில், வதிரி கரவெட்டியைச் சேர்ந்த கோபசிங்கம் மயூரதன் (வயது36) என்பவரே நேற்றுமுன்தினம் உயிரை மாய்த்துள்ளார் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

"அவர் சில நோய்களால் பாதிக்கப்பட்டுள்ளார். அதனால் தினமும் கோவில்கள், ஊர்கள், வெளிமாவட்டங்கள் என மோட்டார் சைக்கிளில் பயணித்து வருபவர்.

கடந்த இரண்டு வாரங்களுக்கு மேலாக அவர் வீட்டுக்குள்ளேயே முடங்கிக் கிடந்தமையால் தற்கொலைசெய்யப் போகின்றேன் என்று விரக்தியுடன் தெரிவித்து வந்தார். இந்த நிலையில் அவர் தூக்கில் தொங்கி உயிரை மாய்த்துள்ளார்" என்று உறவினர்கள் சட்ட மருத்துவ அதிகாரி முன்னிலையான விசாரணையில் தெரிவிக்கப்பட்டது.

விசாரணையின் பின்னர் சடலம் உறவினர்களிடம் ஒப்படைக்கப்பட்டது. (த-26)

# பிரெஞ்சு கடற்படையினர் இலங்கைக்கு சுற்றுலா!

கொழும்பு, ஜூன் 8
கொரோனா வைரஸின் பிடியில் உள்ள இலங்கைக்கு பிரான்ஸின் கடற்படை அணி ஒன்று விஜயம் செய்துள்ளது.

பிரான்ஸின் கடற்படையின் 'ஜொந்தாக்' என்ற 750 சிப்பாய்களைக் கொண்ட அணி வருடாந்தப் பயிற்சிப் பயணங்களின் ஒரு கட்டமாக இந்த வாரம் இலங்கையில் தங்கவுள்ளது.

கடற்படையினரது விஜயம் இலங்கையுடனான பாதுகாப்பு உறவுகளை வலுப்படுத்துவதுடன் இலங்கையின் சுற்றுலாத் துறையை ஊக்குவிப்பதையும் நோக்கமாகக் கொண்டுள்ளது என்று இரு நாடுகளும் தெரிவித்துள்ளன. (ம)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இலங்கையில்...

டாம்" என்று ஊடகவியலாளர்களை சகட்டுமேனிக்குப் பேசிய சுகாதார சேவைகள் பிரதிப் பணிப்பாளர் மருத்துவர் ஹேமந்த ஹேரத், கடும் எதிர்ப்புக்களையடுத்து மன்னிப்புக் கோருகின்றேன் என்று தெரிவித்துள்ளார். அத்துடன் தான் தெரிவித்த கருத்துக்களை எந்த நிபந்தனையுமின்றி மீளப்பெற்றுக் கொள்கின்றேன் என்றும் தெரிவித்தார்.
கடந்த 3ஆம் திகதி நடைபெற்ற ஊடக சந்திப்பின்போது, கண்டியில் ஒரு டோஸை மாத்திரம் ஏற்றிக்கொள்வதற்கு சம்மதம் தெரிவிக்கும் படிவத்தில் கையெழுத்து பெற்றுக் கொள்வது தொடர்பில் கேள்வி எழுப்பப்பட்டது.
மேற்படி கேள்வியை எழுப்பிய ஊடகவியலாளரை நோக்கி, பிரதிப் பணிப்பாளர் ஹேமந்த ஹேரத், "பத்திரிகையாளர் பொறுப்பான ஒருவர். அவர்கள் நடுவே மூன்றாம் தர ஊடகவியலாளர்களும் உள்ளனர். கடந்த காலத்தில் கொல்லப்பட்ட பத்திரிகையாளர்களில் பலர் மூன்றாம் தரத்தினர் என்பது எனக்குத் தெரியும். அதற்காகக் கொல்லப்பட்ட எல்லோரும் தீங்கானவர்கள் இல்லை. அரச அதிகாரத்தையும் அரசியலையும் நீங்கள் குழப்பாதீர்கள். இவ்வாறான கேள்விகளாலேயே அரச அதிகாரிகள் ஊடகங்களை எதிர்கொள்ள விரும்புவதில்லை" என்று தெரிவித்திருந்தார்.
அவர் இவ்வாறு தெரிவித்தமை தொடர்பான காணொலி இரண்டு தினங்களுக்கு முன்னர் வெளியாகியிருந்தது. இதனையடுத்து பல ஊடக அமைப்புக்கள் கண்டனம் வெளியிட்டன. பிரதிப் பணிப்பாளர் பொதுவெளியில் பகிரங்க மன்னிப்புக் கோரவேண்டும் என்று அவை வலியுறுத்தியிருந்தன.
இந்த நிலையில், தான் தெரிவித்த கருத்துக்கு மன்னிப்புக் கோருகின்றேன் என்றும், அவற்றை நிபந்தனையின்றி மீளப் பெறுகின்றேன் என்றும் ஹேரத் தெரிவித்துள்ளார். (ஒ.5,இ)

## சைனோஃபோர்ம்...

துகை இராஜாங்க அமைச்சர் சன்ன ஜயசுமன தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில்,
"கொரோனா வைரஸ் பரவலைக் கட்டுப்படுத்த உலகில் மூன்று விதமான தடுப்பூசிகள் பயன்படுத்தப்படுகின்றன. இதில் எம்.ஆர்.என்.ஏ. தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தி உருவாக்கப்பட்ட பைசர் மற்றும் மொடேனா தடுப்பூசிகளாகும்.
அதேபோல் வைரஸின் வெளிப்படையான புரோட்டின்களைக்கொண்டு தயாரிக்கப்பட்ட ஸ்புட்னிக், அஸ்ராஜெனகா மற்றும் ஜோன்சன் அன் ஜோன்சன் தடுப்பூசிகள்.
அதேபோல் கொரோனா வைரஸை பலமிழக்கச்செய்யும் வைரஸைப் பயன்படுத்தி உருவாக்கப்பட்டுள்ள சைனோஃபோர்ம் மற்றும் சைனோவெக்ஸ் தடுப்பூசிகள் ஒவ்வொன்றும் தன்மைகளில் மாறுபட்டவை" என்றார். (த-22)

## கர்ப்பிணிகள்...

பலகட்ட கலந்துரையாடல்களின் பின்னர் இலங்கையில் தெரிவுசெய்யப்பட்ட கர்ப்பிணிகளுக்கு தடுப்பூசி ஏற்றும் நடவடிக்கை நாளை ஆரம்பிக்கப்படவுள்ளது.
தொற்றா நோய்கள் உள்ள கர்ப்பிணிகள், 35 வயதுக்கு மேற்பட்ட கர்ப்பிணிகள், முன்களப் பணியாளர்களாகப் பணியாற்றும் கர்ப்பிணிகள் மற்றும் கொரோனா கட்டுப்பாட்டு நடவடிக்கையுடன் நேரடியாகத் தொடர்புடைய கர்ப்பிணிகள் ஆகியோர் தெரிவுசெய்யப்பட்ட கர்ப்பிணிகள் வகைக்குள் அடங்குகின்றனர். இவர்கள் கர்ப்பம் தரித்து 3 மாதங்களின் பின்னரே தடுப்பூசி ஏற்ற முடியும்.
கர்ப்பிணிகள் விரும்பினால் மாத்திரமே தடுப்பூசி ஏற்றவேண்டும் எனவும், அவர்களைக் கட்டாயப்படுத்தக்கூடாது என்றும் சுகாதார அமைச்சு அறிவுறுத்தியுள்ளது. (ஒ.5)

## ஒரு மாதத்துக்கு...

கொரோனாத் தொற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.
பருத்தித்துறை ஆதார மருத்துவமனையில் தனிமைப்படுத்தல் விடுதியில் சேர்க்கப்பட்ட 12 நாள்களேயான குழந்தைக்கு தொற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.
யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையின் தனிமைப்படுத்தல் விடுதியில் சேர்க்கப்பட்ட குருநகரைச் சேர்ந்த 20 நாளகளேயான குழந்தைக்கும், தாய்க்கும் தொற்று உறுதிப்படுத்தப்பட்டுள் ளது.
யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையின் முதிராக் குழந்தைகள் அதிதீவிர சிகிச்சைப் பிரிவில் சேர்க்கப்பட்ட 29 நாள்களேயான குழந்தைக்கும் தொற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.
அதேவேளை, சண்டிலிப்பாய் சுகாதார மருத்துவ அதிகாரி பிரிவுக்கு உட்பட்ட இளவாலையைச்சேர்ந்த 9 மாதங்களேயான குழந்தைக்கும், மானிப்பாயைச் சேர்ந்த 10 மாதங்களேயான குழந்தைக்கும் அவர்களது பெற்றோருக்கும் தொற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. (ஒ.5)

## 96 கிலோ....

நாகர்கோயில் கடற்கரையில் கடற்படையினர் நேற்றுக் காலை சிறப்பு ரோந்துப் பணிகளை முன்னெடுத்தனர். இதன்போதே கரையோரத்துக்கு அருகில் 3 சாக்குகளில் 96 கிலோக்கிராம் கேரளக் கஞ்சா கண்டெடுக்கப்பட்டது. கடத்தல்காரர்களால் அந்த கஞ்சாச் சாக்குகள் கைவிடப்பட்டிருக்கலாம் என்று கடற்படையினர் தெரிவித்தனர்.
கடற்படையினரால் மீட்கப்பட்ட குறித்த கேரளக் கஞ்சா கடற்படையின் மேற்பார்வையில், வடக்கு கடற்படைத் தளத்தில் அழிக்கப்பட உள்ளது என்று தெரிவிக்கப்பட்டது. (ப-26.20)

## மேலும் 47...

சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் உறுதிப்படுத்தியுள்ளார் என்று அரச தகவல் திணைக்களம் நேற்றிரவு அறிவித்துள்ளது.
இதற்கமைய நாட்டில் கொரோனாத் தொற்றால் பாதிக்கப்பட்டு உயிரிழந்தவர்களின் மொத்த எண்ணிக்கை ஆயிரத்து 789 ஆக உயர்வடைந்துள்ளது. (த-22)


# சேவைநலன் பாராட்டு



**திரு.சூசைப்பிள்ளை இருதயநாதன்** B.Com, PGDE
பிரதி அதிபர்

**சேவைக்காலம்:**
ஆசிரியராக 25 வருடங்கள்
பிரதி அதிபராக 7 வருடங்கள்

எமது பாடசாலையின் பிரதி அதிபர் **திரு.சூசைப்பிள்ளை இருதயநாதன்** அவர்கள் கல்விப்பணியில் தன்னலமற்ற சேவையாற்றி இன்று ஓய்வுபெறுகின்றார். இவரது சேவையை எமது பாடசாலைச் சமூகமாகப் பாராட்டுவதில் பெருமகிழ்ச்சியடைகின்றோம்.

**பாடசாலைச் சமூகம்**
**யா/இளவாலை கன்னியர் மடம் ம.வி**
**இளவாலை.**


## பெறுகை மீள் அறிவித்தல்
### வலிகாமம் மேற்கு பிரதேச சபை, சுழிபுரம்
### சபைநிதி - 2021

சபைநிதி வேலைத்திட்டங்களுக்கு 01.06.2021 ஆம் திகதி கேள்வி திறக்கப்படும் என 20.05.2021 ஆம் திகதிய பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டது. எனினும் நாட்டில் நிலவும் கொவிட் 19 அசாதாரண சூழ்நிலை காரணமாக 14.06.2021 ஆம் திகதி வரை வேலை நாட்களில் காலை 09.00 மணி முதல் பி.ப 14.00 வரை கேள்வி ஆவணம் விநியோகிக்கப்படும் என்பதுடன் 15.06.2021 ஆம் திகதி மு.ப 10.00 மணிக்கு கேள்வி திறக்கப்படும் என்பதனை அறியத்தருகின்றேன்.

த.நடனேந்திரன்
தலைவர்,
பெறுகைக் குழு,
வலிகாமம் மேற்கு பிரதேச சபை,
சுழிபுரம்.
08.06.2021

# மரண அறிவித்தல்

தோற்றம்
08
06
1985



மறைவு
06
06
2021

## கோபாலசிங்கம் மயூரதன்

யாழ்.வதிரி மாலுசந்தி கரவெட்டியை பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட கோபாலசிங்கம் மயூரதன் 06-06-2021 ஞாயிற்றுக்கிழமை அன்று அகால மரணம் அடைந்தார்.
அன்னார் மாதகல் கோபாலசிங்கம் சந்திராதேவி தம்பதியரின் பாசமிகு புதல்வனும், கனடா கிருஷ்ணகுமார், கணேஷகுமார், லோகேஸ்வரி ஆகியோரின் பாசமிகு அன்பு தம்பியும், காலஞ்சென்ற மாதகல் வீரசிங்கம் சரஸ்வதி மற்றும் கரவெட்டி சிவகொழுந்து சிவப்பிரகாசம் ஆகியோரின் பாசமிகு பேரனும், கனடா சோமசேகரம் நிரஞ்சலா, ராஜேஸ்வரன் வசந்தகுமாரி (இந்திரா) மற்றும் காலஞ்சென்ற கைலாசபதி, பேரின்பநாதன், தர்மேந்திரன், ஆகியோரின் அன்பு பெறாமகனும், கருணானந்தராஜா நாகேஸ்வரிதேவி மற்றும் பவானந்தன் சரோஜாதேவி, சந்திரகுமார் சாந்தி, நித்தியானந்தராஜா புஷ்பராணி ஆகியோரின் பாசமிகு மருமகனும், சுதர்சன், சண்டிகா, ஜனார்த்தனன், சோபா, சாமினி, தாரணி, சிவானி, நிதர்ஷினி, சாயினி, பார்த்தீபன், கோபிகா, சுபராஜ் ஆகியோரின் பாசமிகு மைத்துனனும், கிருஷ்ணவி, பிரணவி, ஷாலினி, சாதனா ஆகியோரின் அன்பு அண்ணாவும், அஜிஸ், ஜெயன் ஆகியோரின் பாசமிகு சித்தப்பாவும் ஆவார்.
அன்னாரின் இறுதிக்கிரிகைகள் இன்று (08.06.2021) செவ்வாய்க்கிழமை முற்பகல் 10.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பின்னர் வதிரி ஆலங்கட்டை இந்து மயானத்தில் பூதவுடல் தகனம் செய்யப்படும்.
இந்த அறிவித்தலை உற்றார், உறவினர் , நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

லோகேஸ்வரி : +94767792586
கிருஷ்ணகுமார் : +1(416) 9372008
கணேஷகுமார் : +1 (416) 497-5675

தகவல்:
குடும்பத்தினர்.



# 300 பியர் போத்தல்களுடன் யாழில் ஒருவர் கைது

யாழ்ப்பாணம், ஜூன் 8
பயணக் கட்டுப்பாட்டுக் காலத்தில், முச்சக்கரவண்டி ஒன்றில் எடுத்துச் செல்லப்பட்ட 300 பியர் போத்தல்கள் யாழ்ப்பாண மாவட்ட குற்றத்தடுப்பு பொலிஸ் பிரிவினரால் கைப்பற்றப்பட்டுள்ளன.
குறித்த பியர் போத்தல்களை விற்பனைக்காக எடுத்துச்சென்றார் என்ற குற்றச்சாட்டில் ஒருவர் கைதுசெய்யப்பட்டுள்ளார். இந்தச் சம்பவம் யாழ்ப்பாணம் கண்டி பிரதான வீதியில், அரியாலை மாம்பழம் சந்திக்கு அண்மையில் நேற்று இடம்பெற்றது. கைதுசெய்யப்பட்ட நபரிடம் விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன என்று பொலிஸார் தெரிவித்தனர். (ப-26)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அடுத்தகட்ட .....

கொழும்புக்கு நாளை வரும் 10 லட்சம் தடுப்பூசிகளும், இரண்டாவது டோஸ் ஏற்றுவதற்கு பயன்படுத்தப்படவுள்ளதாலேயே இந்த முடிவு எட்டப்பட்டுள்ளது எனத் தெரியவருகின்றது.

யாழ்ப்பாண மாவட்டத்துக்கு கடந்த மாதம் 29ஆம் திகதி 50 ஆயிரம் சைனோஃபோர்ம் தடுப்பூசிகள் அனுப்பிவைக்கப்பட்டன. அவை மறுநாள் 30ஆம் திகதியிலிருந்து ஏற்றப்பட்டன. மூன்று நாள்களில் அவை ஏற்றி முடிக்கப்பட்டிருந்த நிலையில் இரண்டாம் கட்டத் தடுப்பூசிகள் விரைவில் வழங்கப்படும் என்று கொரோனா கட்டுப்பாட்டுச் செயலணியின் தலைவரும் இராணுவத் தளபதியுமான சவேந்திர சில்வா தெரிவித்திருந்தார்.

இலங்கைக்கு இந்த மாதம் முதல் வாரத்தில் 20 லட்சம் சைனோஃபோர்ம் தடுப்பூசிகள் கிடைக்கப்பெறும் நிலையில் அவற்றில் யாழ்ப்பாண மாவட்டத்துக்கு இரண்டாம் கட்டத்துக்கு வழங்கப்படும் என்று முன்னர் தெரிவிக்கப்பட்டிருந்தது.

இரண்டாம் கட்டத் தடுப்பூசிகள் யாழ்ப்பாண மாவட்டத்துக்கு கிடைக்கப்பெற்றதும் அதனை ஏற்றுவதற்குரிய ஒழுங்குகள் தொடர்பில் ஆராயும் கூட்டம் வடக்கு மாகாண சுகாதாரத் திணைக்களத்தில் நேற்று நடைபெற்றது. கூட்டம் நடைபெற்றுக்கொண்டிருந்தபோதே, இரண்டாம் கட்டத் தடுப்பூசிகள் இந்த வாரமோ அல்லது இப்போதைக்கோ வழங்கப்படமாட்டாது என்ற விடயம் கொழும்பு சுகாதார அமைச்சு அதிகாரிகளால் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இலங்கையில் தற்போது முன்னெடுக்கப்பட்டுள்ள தடுப்பூசித் திட்டத்துக்கு அமைவாக 14 லட்சம் பேர் சைனோஃபோர்மின் முதலாவது டோஸைப் பெற்றுள்ளனர். அவர்களுக்கு இரண்டாவது டோஸ் ஏற்றுவதற்கே இலங்கைக்கு நாளை வரும் 10 லட்சம் தடுப்பூசிகள் பயன்படுத்தப்படவுள்ளன. அதேபோன்று நேற்றுமுன்தினம் வந்த 10 லட்சம் தடுப்பூசிகளிலும் 4 லட்சம் தடுப்பூசிகள் அதற்காக ஒதுக்கப்பட்டுள்ளன என்று கூறப்படுகின்றது. (ஒ.5)

## கொரோனா பற்றி...

கள் தொடர்பில் கண்காணிக்க குற்றப்புலனாய்வுத் திணைக்களத்தில் விசேட குழு ஒன்று நியமிக்கப்பட்டுள்ளது.

குற்றப்புலனாய்வுத் திணைக்களத்தின் கணினிப் பிரிவிடம் அதற்கான பணி ஒப்படைக்கப்பட்டுள்ளது.

போலியான தகவல்களால் மக்கள் பல்வேறு சிக்கல்களுக்கு முகங்கொடுத்துள்ளனர். அதனால் இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்று பொலிஸ் ஊடகப்பேச்சாளர் அஜித் ரோஹண தெரிவித்துள்ளார். (எ-4)

## நிதி நிறுவன...

வடமராட்சி கிழக்கு உடுத்துறை ஆழியவளையைச் சேர்ந்த சிவலிங்கம் சிவதரன் (வயது34) என்ற 2 பிள்ளைகளின் தந்தையே நேற்றுமுன்தினம் தவறான முடிவெடுத்து உயிரை மாய்த்துள்ளார் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

"கடலுணவுகளை கொள்முதல்செய்து விற்பனை செய்துவரும் அவர், நிதி நிறுவனம் ஒன்றில் குத்தகைக் கட்டணத்தில் வாகனத்தை வாங்கியுள்ளார்.

தற்போது நாட்டில் நடைமுறையில் உள்ள பயணத்தடை காரணமாக அவரது தொழிலில் பின்னடைவு ஏற்பட்டுள்ளது. எனினும், மாதாந்தக் கட்டணத்தைச் செலுத்துமாறு நிதி நிறுவனம் அவரிடம் கோரியுள்ளது.

அத்துடன், அந்த நிறுவனத்தின் அலுவலர்கள் அவரிடம் சென்று பணத்தைக் கோரியுள்ளனர். தன்னிடம் 35 ஆயிரம் ரூபாதான் தற்போது உள்ளது. மிகுதியை கிடைத்தவுடன் செலுத்துகின்றேன் என்று அவர் குறிப்பிட்டுள்ளார். எனினும், நிதி நிறுவன அலுவலர்கள் அவரை ஏசியுள்ளனர்.

இந்தநிலையில், மன விரக்தியில் அவர் தூக்கில் தொங்கி உயிரை மாய்த்துள்ளார்" என்று பருத்தித்துறை ஆதார மருத்துவமனை சட்ட மருத்துவ அதிகாரி முன்னிலையில் நடைபெற்ற விசாரணையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

சடலத்தை உடற்கூற்றுப் பரிசோதனைக்கு உட்படுத்திய பருத்தித்துறை ஆதார மருத்துவமனை சட்ட மருத்துவ வல்லுநர் கனகசபாபதி வாசுதேவா, விசாரணைகளின் பின்னர் சடலத்தை உறவினர்களிடம் ஒப்படைத்தார்.

தற்போது நாட்டில் ஏற்பட்டுள்ள பயணத்தடை மற்றும் தொழில் இழப்புகளால் இவ்வாறு தவறான முடிவெடுத்து உயிர் மாய்க்கும் சம்பவங்கள் அதிகரிக்கும் எனச் சுட்டிக்காட்டியுள்ள சமூக ஆர்வலர்கள், இதைக் கட்டுப்படுத்துவதற்கு ஒருங்கிணைந்த நடவடிக்கைகள் அவசியம் என்றும் வலியுறுத்தியுள்ளனர்.

கடந்த வருடம் இதே காலப்பகுதியில், நிதி நிறுவனங்களிடம் கடனடிப்படையில் வாகனங்கள் உட்பட பொருள்கள் கொள்வனவு செய்திருந்தவர்கள் கடன் செலுத்துவதற்காக சில மாதங்கள் கால அவகாசத்தை அரசு வழங்கியிருந்தது. இந்தமுறை அத்தகைய ஓர் அறிவிப்பை அரசு விடுக்கவில்லை. தற்போது நாடு முடக்கப்பட்டுள்ளதால், தனியார் தொழிலாளர்கள், தினக்கூலிகள் வருமானமின்றி வீடுகளில் முடங்கியுள்ளமையால், நிதி நிறுவனங்களின் பணம் அறவிடும் முறைமை தொடர்பில் அரசு அக்கறையற்றுள்ளது என்று குற்றம் சாட்டும் பொதுமக்கள், இந்த விடயத்தில் தெளிவான அறிவிப்பை அரசு விடுக்கவேண்டும் என்று கோரிக்கை முன்வைக்கின்றனர். (கு-26)

## வடக்கில்...

கழக மருத்துவபீடத்தில் நேற்று 276 பேருக்கு மேற்கொள்ளப்பட்ட சோதனையில் 59 பேருக்குத் தொற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் நேற்றுப் பகல் 604 பேருக்கு மேற்கொள்ளப்பட்ட சோதனையில் 28 பேருக்குத் தொற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் நேற்றுமுன்தினம் இரவு 185 பேருக்கு மேற்கொள்ளப்பட்ட சோதனையில் 7 பேருக்குத் தொற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

**யாழ்ப்பாணம்**

நல்லூர் சுகாதார மருத்துவ அதிகாரி பிரிவில் 5 பேருக்கும், தெல்லிப்பழை ஆதார மருத்துவமனையில் ஒருவருக்கும், மானிப்பாய் பிரதேச மருத்துவமனையில் 7 பேருக்கும், பருத்தித்துறை ஆதார மருத்துவமனையில் 5 பேருக்கும், யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் 6 பேருக்கும், சாவகச்சேரி ஆதார மருத்துவமனையில் இருவருக்கும், சாவகச்சேரி சுகாதார மருத்துவமனை அதிகாரி பிரிவில் ஒருவருக்கும், காரைநகர் சுகாதார மருத்துவமனை அதிகாரி பிரிவில் ஒருவருக்கும், நொதேர்ன் சென்றல் மருத்துவமனையில் ஒருவருக்கும், சண்டிலிப்பாய் சுகாதார மருத்துவ அதிகாரி பிரிவில் 28 பேருக்கும், உடுவில் சுகாதார மருத்துவ அதிகாரி பிரிவில் 17 பேருக்கும், யாழ்ப்பாணம் மாநகர சுகாதார மருத்துவ அதிகாரி பிரிவில் 6 பேருக்கும், கரவெட்டி சுகாதார மருத்துவ அதிகாரி பிரிவில் 8 பேருக்கும் என 88 பேருக்குத் தொற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

**முல்லைத்தீவு**

முல்லைத்தீவு மாவட்ட மருத்துவமனையில் 4 பேருக்குத் தொற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

**வவுனியா**

வவுனியா சுகாதார மருத்துவ அதிகாரி பிரிவில் ஒருவருக்குத் தொற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

**மன்னார்**

மன்னார் மாவட்ட மருத்துவமனையில் ஒருவருக்குத் தொற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. (ஒ.5)

## ஊரடங்கை...

களின் பரிந்துரை தொடர்பில் ஆராயும் விதமாக இன்று செவ்வாய்க்கிழமை ஜனாதிபதி தலைமையில் கூடும் செயலணிக்கூட்டத்தில் இறுதித் தீர்மானம் எடுக்கப்படவுள்ளது. பயணக் கட்டுப்பாட்டை எம்மால் மேலும் இறுக்க முடியும். அதற்காக ஊரடங்கை ஒருபோதும் நடைமுறைப்படுத்தமாட்டோம் என்று இராணுவத் தளபதியும் கொரோனா கட்டுப்பாட்டுச் செயலணியின் தலைவருமான சவேந்திர சில்வா தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்:

எதிர்வரும் 14 ஆம் திகதி வரையில் நீடிக்கப்பட்டுள்ள பயணக் கட்டுப்பாட்டை எதிர்வரும் 21 ஆம் திகதி வரையில் நடைமுறைப்படுத்த வேண்டும் என சுகாதார நிபுணர்கள் வலியுறுத்தியுள்ளனர். அது குறித்து தொடர்ந்தும் ஆராய வேண்டியுள்ளது.

தற்போது வரையில் தொடர்ச்சியாக 23 நாள்கள் நாடு முடக்கப்பட்டுள்ளது. எனவே, இந்த விடயத்தில் சுகாதார நிபுணர்களின் கருத்துக்களை மாத்திரம் கவனம் செலுத்தாது நாட்டின் பொருளாதார நிலைமைகள் குறித்தும் கவனத்தில்கொள்ள வேண்டியுள்ளது.

எவ்வாறு இருப்பினும் சகல தரப்புடனும் பேச்சு நடத்தி தீர்வு காணவேண்டும். ஜனாதிபதி தலைமையில் கூடும் தேசிய கொரோனாத் தடுப்புச் செயலணிக் கூட்டத்தில் இது குறித்த தீர்மானத்தை உறுதிப்படுத்த முடியும் -என்றார். (ஒ.5,22)

## முன்மொழிவுகளை...

பணிப்பாளர் (தொடர்பாடல்) ஷான் விஜயதுங்க குறிப்பிட்டுள்ளார்.

தேர்தல் சட்டங்கள் மற்றும் தேர்தல் முறைமைகளில் மேற்கொள்ளப்பட வேண்டிய சீர்திருத்தங்கள் குறித்த யோசனைகள் மற்றும் முன்மொழிவுகளை எதிர்வரும் ஜுன் 19ஆம் திகதிக்கு முன்னர் எழுத்துமூலம் அனுப்பிவைக்குமாறு நாடாளுமன்ற விசேட குழு பொதுமக்களிடம் கோரிக்கை விடுத்துள்ளது.

இதற்கமைய குறித்த குழுவில் யோசனைகளை முன்வைப்பதற்கு எதிர்பார்க்கும் பொதுமக்கள் மற்றும் ஏனைய ஆர்வமுள்ள அமைப்புகள் தமது முன்மொழிவுகளை தபால் மூலம் அல்லது sec.pscelectionreforms2021@parliament.lk என்ற மின்னஞ்சல் முகவரியின் ஊடாக அனுப்பிவைக்க முடியும் என்று இந்த நாடாளுமன்ற குழுவின் செயலாளரும் நாடாளுமன்ற பணியாட்தொகுதியின் பிரதானியும், நாடாளுமன்ற பிரதி செயலாளர் நாயகமுமான குஷானி ரோஹணதீர தெரிவித்துள்ளார். முன்மொழிவுகள் மற்றும் யோசனைகளை அனுப்பிவைக்க விரும்புவோர் செயலாளர்,

நாடாளுமன்ற விசேட குழு, இலங்கை நாடாளுமன்றம், ஸ்ரீ ஜயவர்த்தனபுர கோட்டை என்ற முகவரிக்கு அனுப்பிவைக்கலாம் என்றும் ஷான் விஜயதுங்க கடிதம் மூலம் ஊடகங்களுக்குத் தெரிவித்துள்ளார். (து)

## தொற்றைக்...

மக்களின் நடமாட்டம் அதிகரிக்குமாயின் வைரஸ் பரவலைக் கட்டுப்படுத்த மேலும் காலதாமதமாகும் என்று பிரதி சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் விசேட மருத்துவ நிபுணர் ஹேமந்த ஹேரத் தெரிவித்தார்.

சுகாதார மேம்பாட்டு பணியகத்தில் நேற்று நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

கடந்த 15 நாள்களுக்கு முன்னரே நாளொன்றில் அதிகூடிய கொவிட் தொற்றாளர்கள் இனங்காணப்பட்டனர். அதனைத் தொடர்ந்தும் சுமார் 10 நாள்களின் பின்னர் மீண்டும் தொற்றாளர் எண்ணிக்கை அதிகரிப்பதை அவதானிக்க முடிந்தது. எனினும், முன்னரைப் போன்று அதிகளவான தொற்றாளர்கள் இனங்காணப்படவில்லை. அதற்கமைய கொவிட் பரவலை துரிதமாகக் கட்டுப்படுத்தக்கூடிய நிலைமை காணப்படுகிறது.


எனினும், போக்குவரத்துக் கட்டுப்பாடுகளின்போதும் மக்கள் நடமாட்டம் அதிகமாகக் காணப்படுமாயின் வைரஸ் பரவலை கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவருவதில் தாமதம் ஏற்படும்.

இந்தநிலையில், தொழிற்சாலைகளில் தொற்றாளர்கள் இனங்காணப்படுகின்றபோது அவர்களுடன் தொடர்புகளைப் பேணியவர்களுக்கும் பி.சி.ஆர். பரிசோதனை முன்னெடுக்கப்படுகிறது. இதன்போது குறித்த நபர்களுக்கு தொற்றில்லைஎன்றமுடிவுகிடைக்கப்பெற்றால் அவர்கள் உடனடியாக சேவைக்கு அழைக்கப்படுவது தெரியவந்துள்ளது. இவ்வாறான செயற்பாடுகள் எம்மால் வெளியிடப்பட்டுள்ள ஆலோசனை வழிகாட்டல்களுக்கு முரணானவையாகும். காரணம், தொற்றாளர்களுடன் தொடர்பைப் பேணியவர்களுக்கு ஆரம்பத்தில் தொற்று ஏற்படவில்லை என்ற முடிவு கிடைக்கப்பெற்றாலும், மீண்டும் தொற்று உறுதிப்படுத்தப்படக்கூடிய வாய்ப்புள்ளது. எனவே, இவ்வாறு செயற்பட வேண்டாம் என்று நிறுவனங்கள் மற்றும் தொழிற்சாலை நிர்வாகத்தினரிடம் வலியுறுத்துகின்றோம். என்றார். இதன்போது, சுகாதார அமைச்சின் குடும்பநல சுகாதார பிரிவின் பணிப்பாளர் விசேட மருத்துவ நிபுணர் சித்ரமாலி டி சில்வா தெரிவிக்கையில்,

35 வயதுக்கு மேற்பட்ட கர்ப்பிணிகள் மற்றும் நோய்களால் பாதிக்கப்பட்டுள்ளவர்களுக்கு முன்னுரிமையளித்து தடுப்பூசி வழங்கும் பணிகள் முன்னெடுக்கப்படவுள்ளன. கொவிட் கட்டுப்படுத்தல் சேவையில் ஈடுபட்டுள்ள கர்ப்பிணிகளுக்கும் முன்னுரிமையளிக்கப்படும். பிரதேச சுகாதார மருத்துவ அதிகாரிகளால் இந்த தடுப்பூசி வழங்கும் பணிகள் முன்னெடுக்கப்படும்.

கொவிட் தடுப்பூசியைப் பெற்றுக் கொண்டாலும் அடிப்படைச் சுகாதார விதிமுறைகளைப் பின்பற்றி மிகவும் அவதானமாகவே செயற்பட வேண்டும்- என்றார். (கு-இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# விசேட மருத்துவரால் பறிபோன தடுப்பூசிகள்

*விசாரணைக்கு கோரிக்கை*

கொழும்பு, ஜூன் 8

சீனாவால் இலங்கைக்கு அன்பளிப்பாக வழங்கப்படவிருந்த 6 லட்சம் கொரோனாத் தடுப்பூசிகளைக் கொள்வனவு செய்ய விடாமல், தடுத்த விசேட மருத்துவர் தொடர்பில் விசாரணை நடத்த வேண்டும் என்று, மருத்துவத் தரப்பினர், ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ச விடம் கோரிக்கை விடுத்துள்ளனர்.

சீனத் தடுப்பூசி தொடர்பான பொய்ப்பிரசாரங்களால், சீனாவால் வழங்கப்படவிருந்த தடுப்பூசிகளைக் கொள்வனவு செய்ய அரசு அக்கறை காட்டவில்லை. குறிப்பிட்ட மருத்துவர் முன்வைத்த காரணங்களின் அடிப்படையில், சீனா வழங்கவிருந்த தடுப்பூசிகளை இலங்கை ஏற்கவில்லை.

6 இலட்சம் தடுப்பூசிகளைப் பெற்றிருந்தால், இன்றைய கொரோனா நிலைமையை ஓரளவு கட்டுப்படுத்தியிருக்கலாம். எனவே இது தொடர்பில் விசாரணைகளை மேற்கொள்ள ஆணைக்குழுவொன்றை நியமிக்க வேண்டும்- என்றார். (எ-4)

# அத்தியாவசிய பொருள்களின் விலை அதிகரிப்பு?

கொழும்பு, ஜூன் 8

அத்தியாவசிய பொருள்கள் உட்பட பலவிதமான பொருள்களின் விலை விரைவில் அதிகரிக்கப்படவுள்ளது என்று தகவல்கள் வெளியாகியுள்ளன.

அதற்கமைவாக சிமெந்து, பால்மா, சமையல் எரிவாயு மற்றும் கோழி இறைச்சி ஆகியவற்றின் விலை அதிகரிக்கப்படலாம் என்று தெரிவிக்கப்படுகின்றது.

அதற்கான அனுமதியை குறித்த நிறுவனங்களின் தலைவர்கள், வர்த்தக அமைச்சிடம் கோரியுள்ளனர் என்றும் தெரிவிக்கப்படுகின்றது. (எ-4)

# எரிபொருள் இறக்குமதி பிரேரணைக்கு எதிர்ப்பு

கொழும்பு, ஜூன் 8

இலங்கைக்கு எரிபொருளை இறக்குமதி செய்து, சுத்திகரித்து விநியோகிக்கும் பணிகளை, தனியார் துறையினருக்கு வழங்குவது தொடர்பில் அமைச்சர் உதய கம்மன்பில, அமைச்சரவைக்கு சமர்ப்பித்துள்ள பிரேரணைக்கு இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் அனைத்து தொழிற்சங்கங்களுக்கும் எதிர்ப்பை வெளியிட்டுள்ளன.

அமைச்சரவையின் அங்கீகாரத்துக்காக சமர்ப்பிக்கப்பட்டுள்ள இந்தப் பிரேரணையை, அமைச்சர் உதய கம்மன்பில திரும்பப் பெற வேண்டும் என்று 8 தொழிற்சங்கங்கள் கோரிக்கை விடுத்துள்ளன.

இதேவேளை அரசின் இந்தப் பிரேரணை தொடர்பில் கலந்துரையாடி, தங்களது கருத்துக்களை முன்வைக்க வேண்டும் என்று அமைச்சர் உதய கம்மன்பில தொழிற்சங்கங்களிடம் கோரிக்கை விடுத்திருந்தார். அந்தக் கோரிக்கையை தொழிற்சங்கங்கள் நிராகரித்துள்ளன. (எ-4)

# சபிக்கப்பட்ட தேசமாக மாறிவிட்டது இலங்கை

*ஐ.ம.சக்தி குற்றச்சாட்டு*



**கொழும்பு, ஜூன் 8**

**கொரோனாத் தொற்றால் உயிரிழப்பு ஒருபுறம் அதிகரித்து வர, பட்டினியால் மக்கள் உயிரிழக்கும் நிலைமை மறுபுறம் தோற்றம் பெற்றுள்ளது. அதனால் இலங்கை சபிக்கப்பட்ட தேசமாக மாற்றம் பெற்றுள்ளது.**

இவ்வாறு ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் எஸ்.எம். மரிக்கார் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

நாட்டில் அத்தியாவசியப் பொருள்களின் விலை, நாளுக்குநாள் அதிகரித்து வருகின்றது. மறுபுறம் கொரோனாத் தொற்றுக்கான தடுப்பூசிகள் இல்லாது மக்கள் சிரமங்களுக்கு முகங்கொடுத்து வருகின்றனர். தடுப்பூசிகள் மக்களுக்குச் செலுத்தப்பட்ட பின்னரே, இங்கிலாந்து உள்ளிட்ட ஐரோப்பிய நாடுகள் முறையாகத் திறக்கப்படுகின்றன. ஆனால், இலங்கை என்ன செய்திருக்கிறது? விஞ்ஞான முறைகளை முழுமையாக மறந்து, மூட நம்பிக்கைகளைப் பின்பற்றிக் கொண்டிருக்கும் ஆட்சியின் பிரதிபலனை அனுபவித்து வருகின்றது. கொரோனாத் தொற்றால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு நிவாரணமாக 5 ஆயிரம் ரூபா வழங்கப்படுவது சரி. ஆனால், அந்த 5 ஆயிரம் ரூபாவில் அனைத்தையும் செய்ய முடியாது. இதனைக்கொண்டு மருந்துப் பொருள்களைக் கொள்வனவுசெய்வதா?, பிள்ளைகளின் கல்விச் செலவுகளைக் கவனிப்பதா?- என்றார். (எ-4)

# வெளிநாட்டவருக்கு விசேட சுற்றறிக்கை

கொழும்பு, ஜூன் 8

வெளிநாடுகளிலிருந்து இலங்கைக்கு வருகை தரவுள்ள பயணிகளுக்கு பொருந்தக்கூடிய, புதுப்பிக் கப்பட்ட சுற்றறிக்கை வெளியிடப்பட்டுள்ளது.

அதற்கமைவாக முழுமையாக தடுப்பூசி செலுத்திய இலங்கையர்கள் மற்றும் இரட்டைக்குடிமக்கள் தங்கள் வீடுகளில் கட்டாயமாக 14 நாள்கள் தனிமைப்படுத்தப்படுவர்.

கடந்த 14 நாள்களில் இந்தியா, வியட்நாம், தென்னாபிரிக்கா மற்றும் தென் அமெரிக்க நாடுகளில் இருந்து வருகை தருபவர்களுக்கு வீட்டுத் தனிமைப்படுத்தல் வசதி பொருந்தாது.

முழுமையாக தடுப்பூசி செலுத்தாமல் வருபவர்கள் அனைவரும் தனிமைப்படுத்தல் ஹொட்டல்களில் அல்லது தனிமைப்படுத்தல் நிலையங்களில் 14 நாள்கள் கட்டாயத் தனிமைப்படுத்தலுக்கு உட்படுத்தப்படுவர்.

அதேவேளை சுற்றுலா பயோ பாதுகாப்பின் கீழ் வரும் சுற்றுலாப் பயணிகளுக்கு இந்த நடவடிக்கைகள் பொருந்தாது என்று சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது. (எ-4)

# 26,000 ரஷ்யர்கள் விரைவில் இலங்கைக்கு சுற்றுப்பயணம்

கொழும்பு, ஜூன் 8

இன்னும் 7 மாதங்களுக்குள் 26 ஆயிரம் ரஷ்ய சுற்றுலாப் பயணிகள் இலங்கைக்கு அழைத்துவரப்படுவர் என்று உதயங்க வீரதுங்க தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,


உக்ரேனிலிருந்து சுற்றுலாப் பயணிகளை அழைத்துவர முயற்சித்தவேளை பல்வேறு அபத்தமான குற்றச்சாட்டுகளை முன்வைத்து, பலர் இந்தத் திட்டத்தை நாசப்படுத்த முயன்றனர்.

இதனால் அந்தக் காலகட்டத்தில் சுமார் 15 ஆயிரம் சுற்றுலாப் பயணிகள் மட்டுமே இலங்கைக்கு வருகைதந்தனர். உக்ரேனிய சுற்றுலாப் பயணிகள் மூலம் கொரோனா பரவியிருந்தால், இலங்கையில் இருந்ததை விட மாலைதீவு 30 மடங்கு அதிகம் பாதிக்கப்பட்டிருக்கும் என்றார். (எ-4)



# நாடு நெருக்கடிக்குள்; சுற்றுலாவிகள் ஏன்?

*எதிர்க்கட்சித் தலைவர் விசனம்*



கொழும்பு, ஜூன் 8

நாடு முழுதும் கடுமையான போக்குவரத்துக்கட்டுப்பாடுகள் நடைமுறையில் உள்ள வேளையில், சுற்றுலாப்பயணிகளுக்கு அனுமதி வழங்கியது ஏன்? இவ்வாறு எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச கேள்வி எழுப்பியுள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

சுற்றுலாப்பயணிகளை யால தேசிய பூங்காவுக்குச் செல்ல அனுமதிப்பது தொடர்பில் அரசு ஆராய்ந்து வருகின்றது.

உலக நாடுகள் தங்கள் எல்லையை மூடியிருந்த வேளை, கொரோனாப் பெருந்தொற்றின் ஆரம்ப காலங்களில் அரசு விளம்பரம்செய்து சுற்றுலாப்பயணிகளுடன் கொரோனாத் தொற்றையும் நாட்டுக்குக் கொண்டு வந்தது. உக்ரைன் சுற்றுலாப்பயணிகளை அனுமதித்து தனிமைப்படுத்தல் விதிமுறைகளைப் புறக்கணித்தது. இந்த நிலையில் மீண்டும் இலங்கையர்களை விட வெளிநாட்டவர்களைக் கொண்டு வருவதற்கு அரசு ஏன் முன்னுரிமை வழங்குகின்றது- என்றார். (எ-4)



Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org